SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

பந்தய கெலி!
(படத்துடன்)

மேல் மாடி—(திப்பு)

டெலிபோன் சண்டை
—தமாஷ்

யுத்தக் காலப் பொய்கள்
—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

அன்பே தீர்ப்பு
—பாரதியார்

"மனித அறிவு"
—கதை

பிராப்தம்

புத்தகம் 4. மாசி மீ 26வ (9-3-34) வெள்ளி இதழ் 15.



சொல்

கெஞ்சலையோ, கொஞ்சலையோ, இழிவையோ, குத்தலையோ உள்ளது உள்ளபடி படமெடுத்துத் தர ஒரே ஒரு பதத்துக்கு வன்மை யிருப்பதுண்டு. சில தனிப் பதங்களுக்கே அபாரமான சக்தி இருக்கின்றது. அந்தப் பதங்களைப் பொறுக்கி இடத்திற்கேற்ப 'வைப்ப'திலேயே இருக்கிறது பேனாக்காரனின் பெருமையும். சாகாத வரம் பெற்ற கவிதைகளில் இந்தப் பதப் பிரயோகங்களின் வலிமையைக் காண்கின்றோம். வள்ளுவன், கம்பன், இளங்கோவடிகள், பாரதியார் இவர்களுடைய சிருஷ்டிகளின் புகழ் நாளுக்கு நாள் ஊறிக்கொண்டேயிருப்பதற்குக் காரணம் பொருளுக்கேற்ற சொற்களின் ஜோடனையே யாகும்.

கூத்தில் கோமாளி யிருப்பதில்லையா, அந்த மாதிரி எல்லாப் பாஷைகளிலும் சில வேடிக்கைகளும் இருப்பதுண்டு. ஒரே சொல் பல பொருள்களைக் குறிப்பதென்பது அத்தகைய வேடிக்கையிலொன்று. அத்தகைய சொற்களைக் கொண்டு சிலேடை கூறுவது, சித்திரக் கவி யியற்றுவது முதலிய சில்லறை விஷமங்களில் சில எழுத்தாளர் இறங்குவதுண்டு. இதெல்லாம் சந்திக்கடை ஜால வித்தைக்குச் சமானமாகுமே யன்றி இலக்கியப் பூஞ்சோலையில் இவைகளுக்கு இடம் தருவதற்கில்லை. அந்தந்தப் பொருளையோ, அந்தந்த வினையையோ விளக்குவதற்கு தனித் தனிப் பதங்கள் இருந்தால்தான் இலக்கியம் கப்பும் கிளையும் விட்டு பிரும்மாண்டமாக வளருவதற்கு இடமேற்படும்.

'அமரகோசம்' வடமொழிக்கும் நிகண்டுகள் தமிழ் மொழிக்கும் செய்திருக்கும் தொண்டுகள் போற்றற்குரியன. பாஷை தோன்றிய காலத்திலிருந்து ஏற்பட்ட அத்தனை பதங்களையும் சாமர்த்தியமாகத் தொகுத்து நமது பெரியோர் நமக்காக வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நிகண்டாசிரியர்கள் செய்த இந்த அரிய கைங்கரியத்தினால் எதிர்பாராத சில விபரீதங்களு மேற்பட்டதுண்டு. ஒரே பொருளை எறக்குறையக் குறிப்பதான பல பதங்களைத் தொகுத்துக் கூறுவது நிகண்டு. தருக்கு, மலர்ச்சி, மத்தம், தன்கு, பாடவம், களிப்பு, செருக்கு, அபிமானம், ஏமம், பெருமிதம், மதர்ப்பு, மதர்வு என்ற பன்னிரண்டு பதங்களும் உள்ளக்களிப்பின் பெயர் என்று எழுதப்பட்டிருக்கிறது சூடாமணி நிகண்டில். ஆனால் இந்தப் பன்னிரண்டு பதங்களின் பொருள்களிலும் தனித் தனிச் 'சாயல்' உண்டு என்றே கொள்ளவேண்டும். 'மலர்ச்சி' என்ற பதம் போடப்பட வேண்டிய இடத்தில் 'செருக்கு' என்ற பதத்தைப் போடலாமா? பதங்களின் பொருள்களிலுள்ள உண்மையைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் நல்ல கடினமான, கனமான, புரியாத பதங்களைத் தூக்கிப் போட்டு வரிசையாக அடுக்கி வைத்து வாசகரைப் பிரமிக்கச் செய்து ஏமாற்றுவர். சுவடி காலத்து ஆசிரியர்களிலும் அநேகர் இந்த ஜால வித்தையில் இறங்கியதுண்டு. ஆனால் இந்த ஜால வித்தையைக் கம்பன், பாரதி, முதலிய சிறந்த கவிஞர்களிடம் காணுவது அபூர்வம்.

தமிழில் உள்ள ஒவ்வொரு பதத்துக்கும் ஒவ்வொரு தனிப் பொருள் இருக்கவேண்டுமென்பதே நமது அவா. இதுவரை அவ்வாறு இல்லாவிட்டாலும் உரை நடையும், கவிதையும் அதிகமாக ஆக ஒவ்வொரு பதத்திற்கும் ஒரு தனி அர்த்தம் ஆசிரியர்களால் ஏற்பட்டு விடுமென்பதும் திண்ணம்.

உதாரணமாக, தற்காலத்தில் உயிரையிழந்துகொண்டிருப்பதான 'காதல்' என்ற பதத்தையே கவனிப்போம். 'காதல்' என்ற சொல்லுக்கும் காமம் என்ற சொல்லுக்கும் ஆதிகாலத்தில் வித்தியாச மில்லாமலேயே உபயோகிக்கப்பட்டதுண்டு. 'காதல், கவறாடல் கள்ளுண்டல்" என்று தொடங்கும் புகழேந்தியின் பாட்டு இதை நிரூபிக்கின்றது. ஆனால் எப்படியோ நாளடைவில் 'காதல்' என்ற பதத்திற்குத் தனிமையும் புனிதமும் ஏற்பட்டது. ஆனால் நிகழ்காலத்தில் 'காதல்' என்ற பதத்தைச் சித்திரவதை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பதத்தின் அர்த்தம் இன்னும் 100 வருடங்கள் கழித்து என்னவாகி விடுமோ தெரியாது. நிற்க,

ஒரு பொருளைக் குறிக்க ஒரு சரியான பதம் இருக்கவேண்டும். ஒரு பதத்திற்கு ஒரு நுண்மையான பொருள்தான் இருக்கவேண்டும். அப்போதுதான் பாஷை செழுமையாயிருக்குமென்பது ஏற்படுகிறது. இன்னின்ன பதங்களை இன்னின்ன சந்தர்ப்பங்களில்தான் பிரயோகிப்பது உசிதம் என்று ஓர் கட்டுப்பாடு இருக்கவேண்டும். இதை யுக்தேசித்தே, காலஞ்சென்ற ஸ்ரீயுத வ. வே. சு. ஐயர் 'பிரயோக இலக்கணம்' என்று ஓர் நூலியற்ற அடிகோலினார். எத்தனையோ முயற்சியைப்போல ஒரே ஒரு அத்தியாயத்துக்குமேல் அந்த நூல் நகரவில்லை. நல்ல கவிஞரின் நூல்களிலும், நல்ல ஆசிரியர்களின் உரைநடைகளிலும் ஒவ்வொரு பதத்துக்கும் ஒரு தனிஸ்தானம், ஒரு தனிக் கவுரவம் கொடுக்கப்பட்டிருப்பது அறியக் கிடக்கின்றது. பேனாவில் பழகுபவர்கள் அந்தப் பேராசிரியர்களின் வழியில் பழகி ஒவ்வொரு பதத்தின் வலிமையையும் உணர்ந்து பிரயோகிப்பார்களாயின் இலக்கியம் வெகு அழகாக வளருமன்றோ!

— சங்கு ஸுப்ரஹ்மணியன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மாசிமீ 26உ வெள்ளிக்கிழமை (9—3—1934) [No. 15

"பந்தயத்தில் கெலிப்பேன்!"

டெல்லியில் அவர் தமது பையினின்று ஒரு கடுதாசியை எடுத்துப் படிக்கின்றார். மறுநாளே பம்பாயிலும். கல்கத்தாவிலும், சென்னையிலும் விலைவாசிகள் தடுமாறுகின்றன. வீசை 7 அணு வீதம் விற்றுக் கொண்டிருந்த சர்க்கரை 8 அணுவாகிறது. டஜன் ஒன்றரையணு, இரண்டணு வீதம் விற்கப்பட்ட தீப்பெட்டி ஆறணுவாக ஏறுகின்றது. டெல்லியில் படித்த அந்தக் கடுதாசியின் மந்திரம்தான் என்ன? அதுதான் இந்தியாவின் வரவு செலவுத் திட்டம்!

'ஸர் சார்ஜ்' என்றால் உபரிவரி என்று அர்த்தம். 'ஸர் சார்ஜ்' போடுவதில் மகா நிபுணரான ஒரு நிதி மந்திரியை இந்தியா பெற்றிருக்கிறது. அவருடைய பெயரும் ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர்! இந்த வருஷத்தோடு அவரது உத்தியோகத் தவணை முடிவடைகிறதாம். ஆகவே போகிற போக்கில் புண்ணியவான் வெகு அழகாக ஓர் வரவு செலவுத் திட்டத்தை வீசிவிட்டுப் போகப்போகிறார். பண விஷயத்திலும் கணக்கு ஜோடிப்பதிலும் மகா ஜால வித்தைக்காரரெனவே ஷுஸ்டரைச் சொல்லவேண்டும். எஸ். வி. மித்ரா சொல்வதுபோல, "செலவினத்தில் 4 கோடி இருக்கவேண்டிய திட்டத்தை 19 லட்சம் வரவு இருப்பதாக"க் கணக்கு ஜோடிப்பது சாமான்யமான சாமர்த்தியமா?

வருஷா வருஷம் புதிய வரிகளைப் பிரயோகிப்பதற்கு ஏதாவது சில சாமான்கள் அவர் கண்ணில் படுவதுண்டு. இந்த வருடத்தில் நெருப்புப் பெட்டியும், சர்க்கரை மூட்டையும் மாட்டிக்கொண்டன. இந்தியாவில் தயாராகும் நெருப்புக் குச்சிகள்மீது குரோஸுக்கு $2\frac{1}{4}$ ரூபா வீதம் வரியையுயர்த்தவேண்டுமென்கிறார் ஷுஸ்டர். அதனால் 3 கோடி ரூபா சர்க்காருக்குக் கிடைக்குமாம். சர்க்கரைமீது அந்தர் ஒன்றுக்கு 1—5—0 வீதம் வரி விதிக்கவேண்டுமாம். அதனால் $1\frac{1}{2}$ கோடி ரூபா சர்க்காருக்குக் கிடைக்குமாம். ஷுஸ்டர் தயாரித்துள்ள அபத்தப் பஞ்சாங்கத்தில் இந்த இரண்டு சாமானையும் ராகுவும் கேதுவும் பிடித்துக் கொண்டன போலும்!

சர்க்கரைத் தொழிலும், தீக்குச்சி உற்பத்தித் தொழிலும் வெகு சமீபத்தில்தான் இந்தியாவில் தலையெடுக்கத் தொடங்கின. அவைகளின் தலையில் வரிச் சுமையை வீசினால் அந்தத் தொழில்களின் ஆயுளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அடுத்த மாதத்திலேயே ஜப்பான் தீப்பெட்டிகளும், ஜாவா சர்க்கரையும் வந்திறங்கி உள்நாட்டுத் தொழில்களோடு விலையில் போட்டி போட்டு நெருக்கிவிடப் போகின்றன. போயும், போயும் இந்த இரண்டு சாமான்களின் பேரிலா ஷுஸ்டர் பாய வேண்டும்!

ஒவ்வொரு மனிதனும் அவனை யறியாமல் சர்க்காருக்குக் காணிக்கை செலுத்துமாறு செய்யவேண்டுமென்பது மேனாட்டுத் தந்திரம். அந்த மறைமுகவரி ரீதியை ஷுஸ்டர் இப்போது பிரயோகிக்கின்றார். நெருப்புப் பெட்டியும், சர்க்கரையும் உபயோகிக்காதவர்



—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி டெல்லிச் சட்டசபையில் சச்சரவு நடந்தபோது, "இந்தப் பந்தயத்தில் கெலிப்பேன்" என்று ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர் என்ற பொக்கிஷ மந்திரி சொன்னாராம்.

யார்? சர்க்கரைத் தொழிலைப் பற்றி ஒரு வார்த்தை. இப்போது இயற்கையின் கொடுமைக்கு இரையாகித் தவித்துக் கொண்டிருக்கிறதே அந்த ஏழைப் பிராந்தியமான பீஹாரில்தான் கரும்பாலைத் தொழில் கொஞ்சம் கொஞ்சம் விருத்தியடைந்து வந்துகொண் டிருந்தது. அடுத்த ஏப்ரல் மாதத்தில் ஒரு வேளை இந்த ஷுஸ்டரின் திட்டம் அமுலுக்கு வந்து விடுமானால் அதோடு ஏழை பீஹாரில் தோன்றிய அந்தத் தொழில் சோர்வடைய வேண்டியது தான். பட்டகாலிலே படுகின்றது பாவம்!

இந்தியாவில் இறக்குமதியாகும் சிகரெட்டுகளுக்கும் புகையிலைக்கும் மனமிரங்கி வரி குறைக்கவேண்டுமென ஷுஸ்டர் முனைகிறார். இந்தியாவில் ஏதோ ஒன்றிரண்டு சிகரெட் தொழிற் சாலைகள் தோன்றி யிருக்கின்றனவே அவைகளோடு அந்நிய நாட்டு ஸிகரெட்டுகள் விலையில் போட்டிபோட்டுச் சுதேசியைப் படுக்கவைத்து விடுமே அதற்காகவா? இன்னும் ஏற்றுமதியாகும் பதனிடாத தோல்மீதிருந்த ஏற்றுமதி வரியை எடுத்ததும் இந்தியத் தோற்சாலைகளுக்கு நஷ்டம்தான்.

இப்படி ஒரு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துச் சமர்ப்பித்தால் அஸெம்பிளியில் உள்ள முதுகெலும்பற்ற அங்கத்தினர்களுக்குக் கூட ரோஷம் ஏற்படுகிறது. பலர் பலவித திருத்தப் பிரேரணைகளை கொண்டு வருகின்றனர். ஆனால் "இந்தப் பந்தயத்தில் நான் கட்டாயம் கெலிப்பேன்" என்று ஷுஸ்டர் அன்று சொன்னாராம்.

ஏன் கெலிக்கமாட்டார்? அவருடைய சட்டைப் பைகளில் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தினர்களும், சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்வதே யோக்யமான வழி என்று நினைக்கும் அங்கத்தினர்களும், விஷயம் அறியாது கைகளைத் தூக்கி வோட்டுத் தருபவர்களும் இருக்கின்றார்களல்லவா? பையில் ஒட்டிருக்கின்ற அந்தத் தைரியத்தினால் தான் "நான் இந்தப் பந்தயத்தில் கெலிப்பேன்" என்று வெகு தைரியமாக ஷுஸ்டர் அன்று சொன்னார்.

"பை முழுதும் வோட்டுக்கள்" —*Courtesy*: ஹி. டைம்ஸ்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை அப்படியே இந்தச் சட்டசபை ஏற்றுக்கொண்டு விடுமாயின் இந்தச் சட்ட சபையின் பொறுப்பற்ற போக்கு இன்னும் நன்றாய் உலகுக்குத் தெரியும்.

எப்.ஏ., பி.ஏ., எம்.ஏ. கூட்டம்

"அட கெடுவாய் பல தொழிலிருக்கக் கல்வி யதிகமென்றே கற்றுவிட்டே னறிவில்லாமல்!" என்று ஒரு தமிழ்க் கவி பாடினார். இந்தக் காலத்தில் பட்ட வேட்டையில் வெற்றி பெற்ற பின்பு சதா விண்ணப்பம் போட்டுக் கொண்டு அலைந்து கொண் டிருக்கும் மாபெரும் கூட்டத்தைப் பார்த்தாரானால் அவர் எப்படிப் பாடி யிருப்பாரோ! ஒரு ஐந்து வருடத் திட்டம் போட்டு அதில் முதல் வேலையாக "இனி காலேஜ்கள் 5-வருடத்துக்குக் கிடையாது" என்று நிர்ணயித்தால் தேசத்துக்கு க்ஷேமம் உண்டு, இளைஞர்களுக்கு மனக்கிலேசமாவது குறையும் என்று ஒரு நண்பர் கூறினார். இரண்டு, மூன்று வருடங்களுக்குள் காலேஜ் படிப்பவர்களின் கூட்டம் விருத்தி யடைந்திருக்கிற தென்னவோ வாஸ்தவம். ஸர்வ கலாசாலைகளில்,

1917-வருஷத்தில் 61,000 பேரும்,
1927 ,, 91,000 ,,
1932 ,, 105,000 ,,

படித்தார்களென்ற கணக்குப் பார்ப்பதற்குச் சந்தோஷமா யிருக்கிற தெனினும் பிற்காலத்தில் அத்தனைபேரும் என்ன செய்வார்களென்ற யோசனை ஏற்படும்போது மனதுக்குக் கஷ்டமா யிருக்கிறது, என் செய்வது?

இந்தியாவிலுள்ள எல்லாச் சர்வ கலாசாலைகளின் பிரதிநிதிகளும் டெல்லியில் கூடி ஆலோசித்து வருகிறார்கள். அந்த மகா நாட்டைத் திறந்து வைத்த வைஸ்ராய்கூட இளைஞர்களின் வேலை யில்லாத் திண்டாட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். பள்ளிக் கூடங்களில் ஏதேனும் கைத்தொழிற் பாடங்களைச் சொல்லித் தரமுடியுமா வென்பது பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார். வைஸ்ராய்க்கு வாஸ்தவமாக வேலை யில்லாத் திண்டாட்டத்தைக் கண்டு வருத்த மிருக்குமானால் அவர் செய்யக்கூடியது ஒன்றுண்டு. வெளி நாட்டிலிருந்து இந்தியாவில் சாமான்கள் இறக்குமதியாவதைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யட்டும். தாமாகவே சுதேசிக் கைத்தொழில்கள் ஓங்கும். வைஸ்ராய் கலாசாலைக்காரர்களுக்குப் புத்திமதி சொல்வதைவிட ராஜீய முறையிலேயே வேலை யில்லாது அலைபவர்களுக்கு உதவிசெய்ய அவருக்கு வழியிருக்கிறது.

நமது உலைக்கூடம்

நெல்லு விளையுமா ?

"மோட்டார் செய்யவில்லை; ஏரோப்பிளேன் செய்யவில்லை; மெஷின்கள் செய்யவில்லை; ரேஸர் செய்யவில்லை; ரேஸர் பிளேடு செய்யவில்லை; குண்டூசி கூடச் செய்யவில்லை. இதெல்லாம் நம் தேசம் எப்போது செய்யப்போகின்றது? நம்ம பணம் எப்போது நமது நாட்டிலேயே தங்கப் போகின்றது" என்று பெருமூச்சு விடும் நண்பர்கள் பலருண்டு. இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். கட்டுகிற துணி வகைகள் அந்நிய நாட்டிலிருந்து வருகின்றன. அவற்றைத் தடுக்க ஒரு வழியைக் காணோம். இப்பொழுதோ தின்னுகிற சோற்றுக்கு வேண்டிய அரிசி கூடக் கப்பல் கப்பலாக அந்நிய நாட்டிலிருந்து வர ஆரம்பித்துவிட்டது. பர்மா அரிசி, சீயம் அரிசி, இந்தோ-சைனா அரிசி இந்த அரிசிகளெல்லாம் இந்தியாமீது படை யெடுத்துக்கொண்டிருக்கின்றன. சீயம், இந்தோ-சைனா இவ்விரு நாட்டிலிருந்தும் இந்தியாவுக்கு வந்திருக்கும் அரிசி மூட்டைகளை டன் கணக்கில் கீழே பாருங்கள்:-

1931-32	....	16,500
1932-33	....	31,200
1933-34	....	45,200
சென்ற டிசம்பர்	....	25,900
,, ஜனவரி	....	20,000
,, பிப்ரவரி	....	14,000

இப்படி அரிசி வரவர அதிகமாக அந்நிய நாடுகளிலிருந்து வந்துகொண்டிருந்தால், ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருக்கும் மூத்துப் போன்ற தஞ்சாவூர், நெல்லூர் முதலிய உள்நாட்டு அரிசிகள் எப்படி விலைபோகும்? அவை விலை போகாவிட்டால், விவசாயிகள் எப்படி வாழ முடியும்? இவற்றை நோக்கும் பொழுது, நெல்லுத்தான் இனி விளையுமோ, அந்தத் தொழிலைக்கூட அந்நியருக்கு விட்டுவிட்டுத் திண்டாடத்தான் வேண்டுமோ என்று தோன்றுகிறது. சர்க்கார் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறதே!

வழவழாப் பதில்

கேள்விக்குப் பட்டதும் படாததுமாகப் பதில் சொல்லித் தப்பித்துக் கொள்வதில் மாகாண மந்திரிகள் மகா கெட்டிக்காரர்கள். வங்காளச் சட்டசபையில் ஒரு கேள்வி வந்தது. 'மகாத்மா காந்தி மிதுனபுரி ஜில்லாவுக்கு வரவேண்டியதில்லை யென்று அந்த ஜில்லா மாஜிஸ்திரேட் சொன்னது வாஸ்தவமா?" என்பது அந்தக் கேள்வி. "ஆமாம்," அல்லது "இல்லை" என்றுதானே மந்திரி பதில் சொல்லியிருக்கவேண்டும். அவ்வாறு சொல்லாமல், "மகாத்மா காந்தி வங்காளத்துக்குச் சமீபத்தில் எப்போது வரப்போகிறாரென்பது பற்றிச் சர்க்காருக்கு ஏதும் தெரியாது" என்று மந்திரி கூறினார். பட்டுக் கோட்டைக்கு வழியென்னவென்றால் கொட்டைப்பாக்குப் பத்துப் பணம் என்பது சரியான பதிலென்பது மந்திரிகளின் எண்ணம்.

சொல்லும் செயலும்

வாயால் சொல்வதொன்று, செய்கையில் நடப்பது வேறொன்று. இந்தச் சித்தாந்தம் அரசியல் உலகத்தில்தான் பலமாக அமுலில் இருந்து வருகிறது. 1930ம் வருஷத்தில் மிஸ்டர் ஹேமன் என்பவர் சட்டசபையில் பேசியபோது இனி ரயில்வேக்களில் இந்தியர்களுக்கே புதிய உத்தியோகங்களை அதிகமாகத் தருவதென்று சர்க்கார் தீர்மானித்துவிட்டதாகச் சொன்னார். ஆனால் 1932-33ம் வருஷத்தில் சர்க்கார் ரயில்வேக்களில் நடந்த கதை என்ன தெரியுமா? 10 பெரிய உத்தியோகங்கள் காலியிருந்தன. அவைகளில் நான்கு அசல் ஐரோப்பியர்களுக்குப் போயிற்று. 2 ஆங்கிலோ இந்தியர்களுக்குப் போயிற்று. மீந்தவை 2 ஹிந்துக்களுக்கும், ஒரு முஸல்மானுக்கும், ஒரு கிறிஸ்துவருக்கும் தரப்பட்டன.

கம்பெனியார் நடத்தும் ரயில்வேக்களின் கணக்கைப் பார்த்தாலும் இந்தியரல்லாதாருக்கே பெரும் பான்மையான பெரிய உத்தியோகங்கள் போய்விட்டன. 26 பெரிய உத்தியோகங்களில் 15 ஐரோப்பியர்களுக்கும் 3 ஆங்கிலோ இந்தியர்களுக்கும் மீந்தது இதர இந்தியர்களுக்கும் தரப்பட்டிருக்கிறது.

இந்திய மயமாச்குவதாகச் சொன்ன உறுதிமொழி எவ்வளவு தூரம் அமுலில் இருக்கிறது பார்த்தீர்களா?

குழந்தைகளும் பீடியும்

நமது தெருக்களில் சின்னஞ் சிறுவர்கள் பீடி பிடித்துக் கொண்டு போவதைக் கண்டால் நமக்கு அருவருப்பு ஏற்படத்தான் ஏற்படுகிறது. பெரியவர்களின் வளர்ந்த சரீரத்தில் புகையிலையினால் ஏற்படும் தீங்குகளைப் பற்றி நாம் இங்கு ஏதும் சொல்ல வரவில்லை. பச்சைப் பாலர்கள் இந்த மாதிரி புகையிலையை உபயோகித்தார்களானால் அவர்களின் சுவாச கோசம் என்னவாகும்? சிறுவர்கள் இத்தகைய தீய பழக்கத்தி லீடுபடாது தடுக்கச் சர்க்காராலும் முனிஸிபாலிட்டிகளாலும்தான் முடியும். ஐக்கிய மாகாணச் சட்ட சபையில் சிறுவர்கள் பீடி பிடிப்பதையும் புகையிலை உபயோகிப்பதையும் தடுப்பதற்காக ஒரு மசோதாவை பிரொபஸர் அஹமத் ஷா கொண்டுவரப் போகிறார். சென்னைச் சட்டசபையிலும் அத்தகைய மசோதா ஒன்றை யாராவது கொண்டு வரலாகாதா?

சர்க்கார் விளம்பரங்கள்

சர்க்கார் டிபார்ட்டுமெண்டுகளும் அவ்வப்போது பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுவதுண்டு. அவ்வாறு விளம்பரம் தரும் சந்தர்ப்பங்களில் பத்திரிகையின் பிரக்கியாதியைப் பற்றியோ, விற்பனையாகும் பிரதிகளைப் பற்றியோ கவனிப்பதே கிடையாது. சர்க்காருக்கு சலாம் போடுகின்ற பத்திரிகையா இல்லையா என்பதைத்தான் கவனிப்பார்கள். பஞ்சாப் சட்டசபையில் இந்தப் பிரச்னை எழுந்தது. மிக மிகக் குறைந்த எண்ணிக்கைகளே அச்சிடப்படும் பத்திரிகைகளுக்குத்தான் சர்க்கார் விளம்பரங்கள் தரப்பட்டிருக்கின்றனவாம். இதைப் பற்றிக் கேள்வி கேட்டுப் பத்திரிகைகளின் பெயர்களையாவது சாககார் சொல்லுமா வெனக் கேட்டபோது 'முடியாது' என்று மறுத்துவிட்டாராம் மந்திரி. பத்திரிகைகளின் பெயர்களைச் சொல்வதற்குக் கூடப் பயமா? வெட்கமா?

உத்தியோகம் 'ஸ்திரீ' லக்ஷணம்

உத்யோகம் புருஷ லட்சணம் என்ற பழமொழியை இனி மாற்றி அமைக்க வேண்டும். தற்காலத்தில் 'உத்யோகம் ஸ்திரீ லட்சணம்!' என்ற பழமொழியும் சேர்ந்துவிட்டது. அன்றைக்கு டெல்லிச் சட்டசபையில் குமாஸ்தினிகளைப் பற்றி (குமாஸ்தாவுக்குப் பெண்பால்—குமாஸ்தினி) ஓர் சர்ச்சை எழுந்தது. குமாஸ்தினிகளுக்குக் குமாஸ்தாக்களைவிட அதிகச் சம்பளம் தருவானேனென்று ஒரு அங்கத்தினர் கேட்டார்.

"திறமையுள்ள குமாஸ்தினிகள் கிடைப்பது அபூர்வமாயிருக்கிறது. சம்பளம் அதிகம் தரவேண்டியிருக்கிறது. ஆபீஸ்களுக்கு இனி உத்யோகங்களில் ஸ்திரீகளிருக்க வேண்டியதுதான். ஏனெனில் ஆண்களைவிட அதிகத் திறமையோடு சில காரியங்களைப் பெண்கள் செய்கிறார்கள்" என்றார் சர்க்கார் மந்திரி. சபையில் சிரிப்பு ஏற்பட்டது.

இன்னொரு அங்கத்தினர் கேட்டார். "ஸ்திரீகள் ஒரு ஆபீஸில் இருந்தால் அந்த ஆபீஸிலுள்ள பெரிய உத்யோகஸ்தர்களின் உணர்ச்சி அதிகமாகின்றது. வேலையும் ஜரூராக நடக்கின்றது. பெண்களை ஆபீஸ்களில் நியமிப்பதற்கு அதுதான் காரணமா?" இந்தக் கேள்விக்கு "இல்லை" என்று மந்திரி பதில் கூறினார்.

"குமாஸ்தினிகள் கல்யாணம் செய்து கொண்டால் உத்தியோகத்தினின்று போய்விட வேண்டுமென்பது சம்பிரதாயமா?" என்பது அடுத்த கேள்வி.

"ஆமாம்!" என்று கூசாது கூறினார் மந்திரி.

"கல்யாணமாகாத பெண்களையே பார்த்துப் பொறுக்கி உத்யோகம் கொடுப்பதற்கு வேறென்ன காரணமாவது உண்டா?" என்று கேட்டார் ஓர் அங்கத்தினர்.

"காரணம் தெரியாதா? கல்யாணமான பெண்களுக்கு வேறு வேலைகளிருக்கின்ற அல்லலவா" என்று சபை முழுதும் கொல்லென்று சிரிக்குமாறு பதிலளித்தார் மந்திரி.

சிரிப்பு ஓர் புறத்திலிருக்கட்டும். படித்த பெண்கள் உத்யோகங்களுக்கு வருவதைப் பற்றி யாரும் 'துஸ—க்கு'ச் சொல்லமாட்டார்கள். ஆனால் கல்யாணமாகாதவளுக்குத்தான் உத்யோகம், கல்யாணமானால் 'கல்தா' என்று வைக்கப்பட்டிருக்கும் நியதிதான் தவறு என்று தோன்றுகிறது.

சட்டைக்கு அசட்டையா?

மனிதன் போட்டுக் கொள்ளும் ஷர்ட்டுக்கு 'ஆள் விழுங்கி' என்று தமிழில் ஒரு கேலிப் பெயருண்டு. ஆள் விழுங்கியது போதாதென்று அரசாங்கங்களையே ஷர்ட்டுகள் விழுங்கிவிடும் போல் இருக்கிறது. அயர்லாந்தில் திவாலராவின் அரசை எதிர்த்து நீலச் சட்டைப் படை தோன்றியது. இத்தாலியில் முஸ்ஸோலினியின் தலைமையின் கீழ்க் கறுப்புச் சட்டையினர் தோன்றி வெற்றி பெற்றனர். ஜெர்மனியில் ஸ்வஸ்திக்காக் குறியுள்ள ஷர்ட் அணிந்தவர்கள் இப்போது ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சியில் எல்லைப்புறத்தில் செஞ்சட்டைக் கோஷ்டி ஒன்று தோன்றியதை நாம் மறக்கமாட்டோம். இன்றைக்கும் ருஷியாவில் உள்ள செஞ்சட்டைப் படையைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொள்கின்றார்கள். உலகில் சமாதானமே நிலவ வேண்டுமென்றும் எங்குமே யுத்தங்கள் நடக்கக் கூடாதென்றும் ஐரோப்பாவில் 'சமாதானச் சங்கம்' ஒன்று தோன்றியிருக்கிறது. அவர்கள் சமாதானப் பிரியர்கள் பச்சைச் சட்டை அணிந்து கொள்ள வேண்டுமெனக் கூறுகின்றனர். இப்படியாக உலகெங்கும் இப்போது சட்டைப் பித்துப் பிடித்து அலைகின்றது.

இந்தப் பித்தத்தினின்று பிரிட்டன் மட்டும் தப்பமுடியுமா? அங்குகூட ஒரு கறுப்புச் சட்டைப் படை சிருட்டிக்கப்பட்டு வருகிறது. ஆஸ்வால்ட் மாஸ்லி என்பவன் F-ஆஸிஸத்தைப் பிரசாரம் செய்து தனது கோஷ்டியை வலுப்படுத்தி வருகின்றான். இந்த மாதிரி சட்டை இயக்கத்திடம் அசட்டை காட்டலாமா வென்று சீமையில் காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி பிறந்தது. மேற்படி இயக்கத்தைக் கூர்ந்து கவனித்து வருவதாகச் சர்க்கார் மந்திரி பதில் கூறினார். அயர்லாந்தில் நீலச் சட்டை போடுவதைத் தடுக்க அந்தத் தேசச் சட்டசபையில் ஓர் தீர்மானமும் வந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

வங்காளத்தில் கெடுபிடி!

நாம் அச்சுக்குப் போகும்போது வங்காளச் சட்டசபையில் கிரிமினல் லா திருத்த மசோதா ஒன்று வாதிக்கப்பட்டு வருகிறது. 'பயங்கர இயக்கத்தினரை அடக்குவதற்காகவே இந்த மசோதா' என்று சர்க்கார்த் தரப்பினர் அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறார்களாயினும் மசோதாவின் உள்ளே புகுந்துபார்த்தால் அத்தனையும் தேசீய இயக்கத்தைக் கொல்வதாகவும் பத்திரிகைச் சுதந்திரங்களைப் பறிப்பதாகவும் இருக்கின்றன. இந்த மசோதா நிறைவேறி விட்டால் வங்காளம் பிறகு என்ன பாடுபடுமோ?

ஜீவனத்துக்கு வழி யில்லையாம்!

"ஜீவனத்துக்கு வழி யில்லை" என்று பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டு லட்சம் பேர் அடங்கிய வேலை யில்லாதார் ஊர்வலம் ஒன்று பம்பாயில் சென்ற ஞாயிறன்று சென்றது. இன்னும் சில ஊர்களிலும் இத்தகைய ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மக்களுக்கு ஜீவனத்திற்கு வழி தருவதைப் பற்றி மாகாண அரசாங்கம் எந்த யோசனையும் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் மகாத்மா காந்தியின் பேரனை ஸ்ரீ கானு காந்தியை அகமதாபாத்தில் காங்கிரஸ் பிரசாரம் செய்ததற்காகக் கைது செய்து "ஜீவனத்திற்கு அவருக்கு வழி யில்லை" என்று கி.பி.கோ. 109-ம் செக்ஷனின் கீழ்க் குற்றம் சாட்டி 9 மாதம் தண்டித்து விட்டார்கள். மகாத்மாவின் பேரப் பையனுக்கு 'ஜீவனத்துக்கு வழி யில்லை' என்ற குற்றம் சாட்டியது ஒரு பக்கமிருக்கட்டும். சிறையில் போட்டுவிட்டதால் ஜீவனத்துக்கு வழி யுண்டாக்கி விட்டதாக அர்த்தமா? ஆனால் அதே சமயத்தில் ஜீவனத்துக்கு வழி யில்லை யென்று பகிரங்கமாகப் பம்பாய்த் தெருக்களில்சொல்லிக்கொண்டு அலைந்த லட்சம் பேர்களைச் சர்க்கார் ஏதும் செய்யவில்லை யன்றோ? ஆகவே கி. பி. கோ. 109-ம் செக்ஷன் சமயா சமயங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகள் உபயோகித்துக் கொள்வதற்காக ஏற்பட்ட சட்டமே யன்றி வேறில்லை யென்பது விளங்குகின்றதல்லவா?

மனித அறிவு

[வால்டேர் என்பவர் பிரான்சு தேசத்து ஆசிரியர்களுள் ஒருவர். சமூகத்தின் கோளாறுகளையும், மனிதனின் சிறுமையையும் குத்திக்குத்தி எழுதுவதில் அவர் பேனா மிக்க வன்மையுடையது. அவர் எழுதிய இந்தச் சிறு கதையைப் பிறகு பெருங்கதையாகவும் அவர் எழுதியிருக்கின்றார். சுருக்கக் கதையின் மொழி பெயர்ப்பு இங்கு தரப்படுகின்றது. —சங்கு ஸுப்ரஹ்மணியன்.]

இனிமேல் மிக்க கெட்டிக்காரனாக வாழ்வதென்று திம்மன் ஒருநாள் தீர்மானித்துவிட்டான். இத்தகைய தீர்மானத்தை உலகில் ஒவ்வொருவரும் ஒரு தடவையாவது செய்திருப்பார்களென்பதில் ஐயமில்லை.' தீர்மானத்தைப் பற்றி திம்மன் பின்வருமாறு ஆலோசித்தான்.

"கெட்டிக்காரனாக் வாழ்ந்தால் சந்தோஷம் கட்டாயம் ஏற்படும். காமக்குரோதாதிகளைத் துறந்தால் கவலைக்கு இடமேது? முதன் முதலாக இனிப் பெண்களின்மீது ஆசை கொள்ளக் கூடாது. எங்கேயாவது ஓர் மோகினி மயக்க வந்தாளானால் உடனே, 'சீ! சீ! இந்தக் கன்னங்களெல்லாம் ஒருநாள் ஒட்டி யுலர்ந்தேபோவன. மைதீட்டிய இந்தக் கண்களெல்லாம் ஒரு காலத்தில் குழிந்தேபோகும். இந்தச் சதையெல்லாம் கட்டாயம் வாடியே தீரும். இந்த அழகான குழல் உதிர்ந்து வழுக்கைத் தலையாய்ப் போகத்தான் போகிறது' என்பனவற்றை ஒரு தடவை நினைப்பூட்டிக்கொள்வேன். இந்தக் காட்சியை அந்த மோகினியின் தற்கால உருவத்தில் நுழைத்துச் சிந்தித்தால் பெண்ணாசை ஏற்படவே ஏற்படாது. இது நிச்சயம்.

"இரண்டாவதாக இனி மதுபானம் செய்யலாகாது. எவ்வளவுதான் நண்பர்கள் வற்புறுத்தினாலும் உடனே மதுபானத்தினால் விளையும் தீங்குகளைப் பற்றி ஓர் தடவை நினைத்துக்கொள்கொள்வேன். குடியினால் தலை கனத்துப்போவதும், வயிறு கெட்டுப்போவதும், அறிவு மழுங்கிப்போவதும் ஆரோக்கியம் சீர்கெடுவதும் யார்தான் அறியார்? அளவுக்கு மிஞ்சி எதையும் இனிச் சாப்பிடப்போவதில்லை. ஆகவே நோயற்ற வாழ்வும், தெளிவான அறிவும் எனக்கு ஏற்படும்.

"எனது ஆசைகளைக் கட்டுப்படுத்திவிட்டால் செலவு மட்டுப்பட்டுவிடும். இதுவரை சம்பாதித்த அத்தனை பணத்தையும் பெரிய பாங்கியில் போட்டிருக்கின்றேனே. எனக்கென்ன கவலை? ஒருத்தனிடம் போய்க் கைகட்டி நிற்க வேண்டியதில்லை. ஏதோ பொறுக்கினாற்போலச்சில நண்பர்களோடுமட்டும் உறவாடப் போகின்றேன். கோபம் என்பது இனி என்னிடம் தோன்றப் போவதில்லை. ஆனந்தம்! பரமானந்தம்! இனிமேல் என் வாழ்வுக்கு நிகருண்டா?" என்று மனச் சித்திரம் வரைந்து முடித்தான்.

இப்படி அவன் தன் வாழ்வுக்குத் திட்டம் போட்டுக் கொண்டவுடன் ஜன்னல் வழியாகத் தெருவை நோக்கினான். யாரோ இரண்டு ஸ்திரீகள் அந்த மரத்தடியில் நின்றுகொண்டிருந்தனர். ஒன்று கிழம்; ஆனால் மற்றொருத்தி தளிர்போன்ற அழகி. அவள் ஏதோ துயரத்தோடிருப்பது போலத் தோன்றிற்று. "ஐயோ என்ன கஷ்டமோ பாவம்!" என்று நினைத்தான் நமது புதிய ஞானி. ஆகவே விருவிரென்று இறங்கித் தெருவுக்கு வந்தான். அந்த யுவதியருகே சென்று விசாரித்தான். அந்த யுவதி தனது கஷ்டங்களையெல்லாம் பரிதாபக் குரலில் விவரித்தாள். யாரோ அவளுடைய மாமாவாம். அவன் மகா பாதகனாம்; அவளுக்குச்சொத்திருந்ததாம்.' அத்தனையையும் விழுங்கி விட்டானாம். ஒரு வேளை மேலும் தன்னை இம்சிப்பானோவென அவள் வருந்துகின்றாளாம். கதை சோகமாகத்தானிருந்தது. ஆனால் உண்மையில் அவளுக்குச் சொத்திருந்ததே கற்பனை. ஆகவே அதை ஒருவன் விழுங்கியதென்பதும் கற்பனை. மாமன் என்ற ஒருவன் கதையில் வந்தானே அதுவும் அவளது சிருஷ்டியே.

"ஐயா! உங்களைப் பார்த்தால் புனிதராகத் தோன்றுகின்றீர். ஏதோ இந்த ஏழைக்கு ஆபத்துக் காலத்தில் ஏதாவது கூறுங்கள். சவுகரியப்பட்டால் எங்கள் வீட்டுக்குக் கொஞ்சநேரம் வந்து போங்களேன். அப்போது எங்கள் கஷ்டமெல்லாம் மிகமிகத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்; வருகிறீர்களா?" என்று அந்த அழகி கொஞ்சும் குரலில் கூறினாள்.

நமது புதிய ஞானி தமது அறிவை உபயோகிக்கச் சமயம் வந்ததென்றும், தமது ஆலோசனையை இலவசமாய்த் தர்மம் செய்யச் சந்தர்ப்பம் வாய்த்ததென்றும் நினைத்துக்கொண்டு அந்த யுவதியைத் தொடர்ந்தார்.

அழகான ஓர் அறை. அதன் நடுவே ஓர் சோபா. அதன் ஓர் புறத்தில் அவள். மற்றொரு புறத்தில் புதிய ஞானி. அவள் ஏதோ சொல்லிவிட்டுக் கீழே குனிகிறாள். இரண்டு நீர்த்துளிகள் கண்களினின்று உதிர்கின்றன. நிமிர்ந்து ஞானியாரின் கண்களை ஆதரவோடு நோக்குகின்றாள். ஞானிக்கு வரவர இருதயம் நைகின்றது. இவ்வளவு சுத்தமாயுள்ள இந்த நாரீமணிக்கு உதவி செய்வதைவிட உலகில் வேறு என்ன நற்காரியம் செய்வது என்று ஞானி தனக்குள்ளேயே கேட்கின்றான். மணி ஆகஆக ஞானி அவளருகே நகர்ந்து அவளைத் தேற்றுகின்றான்.

அந்த சமயத்தில் திடீரென்று கதவு திறக்கப்பட்டது. அந்த 'மாமா' வந்து நின்றான். உச்சந்தலையினின்று உள்ளங்கால் வரை அவன் ஆயுத பாணியாக இருந்தான். "அட பயலே! என் மருமகளிடம் என்னடா பண்ணத் துணிந்தாய்?" என்று கர்ஜித்தான். திம்மனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கடைசியாக எப்படியாவது தனது மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு வெளியேறினால் போதுமென்று திம்மன் நினைத்துவிட்டான். ஏதோ ஓரளவு பணம் தந்தால் சும்மா யிருந்துவிடுவதாக மாமன் சமாதானம் பேசியது திம்மனுக்குப் பால் வார்த்தது போலிருந்தது. 'சரி' யென்று ஒப்புக்கொண்டு திம்மன் வீட்டுக்குத் திரும்பினான். கஷ்டப்படும் நாரீமணியின் கதை யாரைக் கஷ்டப்படுத்தி விட்டது பார்த்தீர்களா?

வீட்டுக்கு வந்ததும் ஏதோ விருந்துக்கு வருமாறு அழைப்புப் பத்திரம் ஒன்று வந்து கிடந்தது. சமீபத்தில் தனக்கு ஏற்பட்ட சம்பவமும் பண நஷ்டமும் அவன் மூளையிலே சுற்றிக்கொண் டிருந்தன. இப்படிக் கவலைப்பட்டால் சோறு வேண்டி யிருக்குமா? சோறு இல்லாவிட்டால் ஆரோக்கியமேது? ஆகவே இந்த அவமான அநுபவத்தை மறப்பதற்காக நண்பர்களோடு சிறிது உல்லாசமாக இருந்து

விட்டு வரலாமென்ற முடிவுக்கு ஞானி வந்து சேர்ந்தார்.

அங்கு போனார். புன்னகை நண்பர் கூட்டமும் பூப்போட்ட கோப்பையும் அவனை வசிகரித்தன. கொஞ்சம் குடித்தாலென்னவென அவன் நினைத்தான். மிதக் குடி—பிறகு மிடாக்குடி! குடித்தவனுக்குப் பொழுது போகவில்லை. அந்த நண்பர்களோடு உட்கார்ந்து கொண்டு பகடையாடத் தொடங்கினான். சூது வெறி வலுத்தது. கையிலிருந்த காசெல்லாம் கரைந்து கடனும் சொல்லியாகிவிட்டது. எல்லா நஷ்டமும் அவனது கோபத்தைக் கிளப்பின. அங்கிருந்தவர்களோடு சண்டைபோட நேர்ந்தது. சண்டையில் நமது ஞானிக்கு ஒரு கண் பொட்டையாகி விட்டது. கண்ணையும் பறிகொடுத்த திம்மன் தட்டித் தடவி வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

குடிவெறி யெல்லாம் தணிந்து தூங்கி யெழுந்த பின்பு தான் பட்ட கடனையெல்லாம் ஒருவாறு தீர்த்தொழிப்பதென்று நினைத்து பாங்குக்குப் போய்வர வேலைக்காரனை அனுப்பினான். போனவன் சில நிமிஷத்தில் வெறுங்கையோடு திரும்பி வந்தான். நமது ஞானி போட்டிருந்த பாங்கி திவாலாகி விட்டதாகவும், அநேக குடும்பங்களுக்குக் குல்லாய் போட்டுவிட்டு அந்த பாங்கர் கம்பி நீட்டிவிட்டதாகவும் செய்தி கிடைத்தது.

என்ன செய்வதென்று திம்மனுக்குத் தோன்றவில்லை. அந்த சமஸ்தானத்தை ஆண்டுகொண் டிருந்த அரசனிடம் ஓடி முறையிடுவதென்று நினைத்து அரண்மனைக்கு ஓடினான். அப்போது அரசர் தமது பணிப் பெண்களோடு விளையாடிக்கொண் டிருந்தார். வெகு நேரம் சென்ற பின்பு ஞானிக்குப் பேட்டி கிடைத்தது. அரசர் காலில் விழுந்து முத்தமிட்டான். அவர் ஒரு மந்திரியைக் கூப்பிட்டு வேண்டுவன செய்யுமாறு உத்தரவிட்டு விட்டுப் போய்விட்டார்.

மந்திரி வந்தான். ஞானி தனது கதையையெல்லாம் புல்லும் உருகப் புகன்று நின்றான். "அட பொட்டைக் கண்ணா! இந்தக் கதையோடா அரசரிடம் வந்து நின்றாய்? அட அசடே! இன்ஸெல்வெண்டான அந்த பாங்கர் அரசரின் அடைக்கலமென்பது சட்டம். அவனைப் பற்றிப் புகார் செய்து பலனென்ன? ஏதோ உன் முகத்தில் இன்னும் ஒரு கண் இருக்கின்றதே, அதற்கும் கேடுகாலம் வந்து விட்டது போலிருக்கிறது" என்று மந்திரி மிரட்டினான்.

இனி மகா ஞானியாக வாழ்வதென்று அன்று காலையில் தீர்மானித்த திம்மன், தான் ஒரு மோகினியைச் சந்தித்ததையும், பணத்தை இழந்ததையும், கள் குடித்ததையும் சூதாடியதையும், கடைசியில் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுத் துரத்தப் பெற்றதையும் எண்ணி உருகினான். அந்தக் கண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டிக்கொண்டு வீடு திரும்பினான். வரும் வழியில் காலையில் கண்ட அந்தக் காதகி தனது கள்ளப் புருஷனோடு இந்த 'ஞானியை'க் கண்டு கேலிச் சிரிப்பு சிரித்துக்கொண்டே நடந்தாள். திம்மனால் துயரம் தாளமாட்ட வில்லை. தனது வீட்டு வைக்கோற் போரடியில் திடீரென்று ஆயாசத்தால் விழுந்துவிட்டான்.

நாலைந்து மணி ஆகியிருக்கலாம். என்ன ஆச்சரியம்! திம்மனின் மனக் கண்முன் அவனது குலதேவதை வந்து தோன்றிற்று.

"தாங்கள் யார்?" என்று கேட்டான் திம்மன்.

"நான்தான் உன் குலதேவதை!"

"குலதேவதையா? அப்படியானால் என் கண்ணையும், இழந்த செல்வத்தையும், இழந்த அறிவையும் மீண்டும் தரலாகாதா?"

"ஒரே நாளிலா இத்தனையையும் இழந்தாய்?"

திம்மன் சவிஸ்தாரமாக எல்லாவற்றையும் கூறினான்.

"ஓ அப்பா! நான் வசிக்கின்ற உலகத்தில் இப்படி யெல்லாம் நடப்பதில்லையப்பா?"

நீங்கள் எந்த உலகத்தில் வசிக்கிறீர்களோ?"

"இங்கிருந்து 500 கோடி மைல் தூரத்தில் ஒரு கிரகம் இருக்கிறது. அதுதான் எனது வாசஸ்தலம். ஆயில்ய நட்சத்திரத்துக்கு அருகே அது இருக்கின்றது."

"உங்கள் ஊரில் இளைஞரை ஏமாற்றும் மோகினிகள் இல்லையா? பணத்தை அபகரிக்க நண்பர்கள் இல்லையா? கண்ணைப்பொட்டையாக்கும் கருவிகள் இல்லையா? பாங்கர்களில்லையா? அண்டினோரை உதறித்தள்ளும் அரசனென்றவன் இல்லையா?" என்று தொடர்ந்தாற் போல் கேள்விமாரி பொழிந்தான் திம்மன்.

குலதேவதை புன்சிரிப்போடு பதில் கூறியது. "எங்களை யாரும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் எங்கள் தேசத்தில் ஸ்திரீகளில்லை. நாங்கள் குடிப்பதுமில்லை. எங்கள் உலகத்தில் பணங்காசு இல்லாததால் பாங்கர்களுமில்லை. அரசரின் அநீதிக்கு நாங்கள் முறையிட வேண்டாம். ஏனெனில் எங்கள் லோகத்தில் எல்லோரும் சமம்!" என்றது தேவதை.

"ஸ்திரீகளும் மதுபானமும் இல்லாமல் உங்களுக்குப் பொழுது போகிறதா?"

"பொழுது போவதற்கென்ன? பூலோகத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருந்தோமானால் பொழுது தானே போகிறது."

"அப்படியானால் நீங்கள் எனது குலதேவதையாயிற்றே. நேற்று நான் தப்பு செய்தபோது அவ்வாறு செய்யக் கூடாதென்று என்னை நீங்கள் தடுத்திருக்கலாகாதா?"

"நான் என்ன செய்யட்டும்? உன்னைவிட அதிகக் கஷ்டத்தில் உன் தம்பி பொம்மன் வேறொரு ஊரில் கிடக்கின்றான். உனக்கு அந்த சமாசாரம் இன்னும் எட்டவில்லை. அவன் இரண்டு கண்ணையும் ஒரு அராபி அரசன் குத்திவிட்டான். அங்கே நான் போயிருந்தேன்."

"நல்ல தெய்வமையா இது. ஒரு சகோதரனுக்கு ஒரு கண்ணும் இன்னொருவனுக்கு இரு கண்களும் போகும்வரை சும்மா இருந்த தெய்வத்தை எங்கள் குலதெய்வமெனக் கொண்டாடுவதா?"

"அட அப்பா! நீ அதி தீவிரமாக ஞான வைராக்கியத் தீர்மானத்துக்கு வந்தாயே, அதனுடைய பலன் இவ்வளவும். ஆனால் வைராக்கியமாக ஒருவர் வாழ்வது ஒரே ஒரு உலகில்தான் முடியும். பாக்கி கிரகங்களில் அது முடியவே முடியாது. ஞான வாழ்வு கிரகத்துக்குக் கிரகம் குறைகின்றது. கடைசிக் கிரகத்தில் பயித்தியக்காரர்கள் தான் நிறைந்திருக்கின்றனர். அந்த கிரகம் தான் நீ வாழும் இந்தப் பூலோகம். இங்கே மனிதன் செய்யும் சித்தாந்தங்களுக்கும் தீர்மானங்களுக்கும் குறைவு இல்லை. ஆனால்"—என்று சொல்லி மறைந்தது குலதெய்வம்.



காணமற்போன கன்று

(பே. கோ. சுந்தர ராஜன்)

"ஹை! ஹை!"

மாட்டு மந்தையை ஊர் நோக்கி ஓட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தான் வீரன். மஞ்சள் வெய்யில் மறையும் அந்த நேரத்தில் தூசி கிளப்பிக்கொண்டே அந்த மந்தை வந்துகொண்டிருந்த காட்சி வெகு இனிமையாயிருந்தது. கொழு கொழுவென்றிருந்த பசுக்கள். விஷமம் மிகுந்த கன்றுக் குட்டிகள். வீரன் ஏதோ ஒரு தில்லானாப் பாடிக்கொண்டே வந்துகொண்டிருந்தான். அந்தப் பாட்டை நடு நடுவே அவன் நிறுத்திவிட்டுத் தங்களைக் கவனிக்கவேண்டுமென்று சொல்வதுபோல அந்த விஷமக் கன்றுகள் இடையிடையே மந்தையை விட்டு துள்ளித் துள்ளி ஓடிக்கொண்டிருந்தன. வீரனுடைய பாட்டும் அதட்டலும் மாறி மாறி வருவது வேடிக்கையாகவே யிருந்தது.

ஒரு புல்லுக் கட்டைச் சுமந்துகொண்டு முத்தனும் வீடு திரும்பிக்கொண்டிருந்தான். வீரன் அவனோடு பேசிக்கொண்டே நடக்க ஆரம்பித்தான். மறுநாள் அடுத்த கிராமத்தில் நடக்கப்போகும் திருவிழாவுக்குக் கட்டாயம் போகவேண்டுமென்று இருவரும் தீர்மானித்தனர். எஜமான் இரத்தினம் பிள்ளையிடம் எப்படி அனுமதி வாங்குவது என்பதே வீரனின் கவலை.

"எங்க ஆத்தாகிட்டச் சொல்றேன். அவுங்க எசமானியம்மா கிட்டேச் சொல்லி விடுவாங்க. அப்படித்தான் செய்யணும். என் முத்தா, நல்ல யோசனைதானே. நாளைக்குத் திருவிழாவிலே வளையம் போடணும். ராட்டினத்திலே ஏறணும் தெரியுமா. காசு

என்று சிரித்துக்கொண்டே கூறினான் வீரன்.

முத்தன், "நீ காசுக்கு என்ன பண்ணுவே? ஒங்கப்பாரு இன்னமும் குடிக்கிறாரில்லையா?" என்று கேட்டான்.

"அதையேன் கேக்குரே! என்ன குடி, என்னகுடி! எங்க ஆத்தா என்ன பாடு படரா தெரியுமா? இன்னிக்கு அப்பாவு குடிக்காதே வந்தாரன்னா காசுகேட்டு வாங்கலாம்னு இருக்கேன். இல்லாட்டி எசமான் வீட்டு அம்மாவைக் கேட்கணும்" என்று கூறினான் வீரன். வீரன், அவனது தகப்பன், அவனது தாய் எல்லோரும் மிராசுதார் ரத்தினம் பிள்ளையின் பண்ணையில் வேலை செய்துவந்தார்கள். எசமான் வீட்டில் வீரனுக்குக் கொஞ்சம் சலுகையுண்டு.

"ஏண்டா வீரா! அந்த செவலைப் பசு எங்கேடா?" என்று முத்தன் திடீரென்று மந்தையை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கேட்டதும் வீரன் திடுக்கிட்டான். அந்த பசுவை மந்தையில் காணவில்லை.

"எங்கே போயிருக்கும்? நான் மந்தையிலிருந்து அதையுங்கூட ஓட்டிக்கிட்டு வந்தேனே" என்றான் வீரன்.

"ஒரு வேளை அது முதல்லேயே வீட்டுக்குப் போயிருச்சோ என்னமோ" என்று முத்தன் தேற்றினான்.

வீரனுக்குக் கலவரம உண்டாய் விட்டது. மாடுகளை விரைந்தோட்டிக்கொண்டு பிள்ளையின் வீட்டுக் கொட்டத்தை யடைந்தான். அங்கே செவலைப் பசுவைக் காணவில்லை. அவனுக்குத் திகில் அதிகமாயிற்று.

"வீரா! செவலைப் பசுக் கன்னு எங்கேடா? மந்தைக்கு வந்திச்சா என்ன?" என்று அங்கிருந்தோர்

யச் செய்தது. செவலைப் பசு எங்கே என்ற கேள்வியோடு அதன் கன்று எங்கே என்ற கேள்வியும் சேர்ந்துகொண்டது. வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை. பசு மாத்திரமன்றிக் கன்றும் மறைந்ததென்று தெரிந்தவுடன் இரண்டையும் தேடி ஓட்டிக்கொண்டு வரும்படி எசமான் வீட்டு அம்மாள் உத்தரவிட்டு விட்டார்கள். நல்ல வேளையாகப் பிள்ளை அவர்கள் இன்னும் வரவில்லை. அவரும் திருவிழா விஷயமாகத்தான் அடுத்த கிராமம் சென்றிருந்தார்.

பயம் மிகுந்து நம்பிக்கை யிழந்து வீரன் மேய்ப்பிடம் நோக்கி ஓடினான். அதற்குள் மறைந்த மாட்டையும் இளங்கன்றையும் தேடுவதற்காகப் பல திசைகளிலும் வேலையாட்கள் அனுப்பப்பட்டனர். எங்கு தேடியும் வீரனுக்கு மாடு அகப்படவில்லை. என்ன தண்டனை நேருமோ என்ற திகிலுடன் அவன் விஷயம் முழுவதையும் தன் தாயிடம் சொல்ல வீட்டுக்கு விரைந்தான்.

குடிசையின் வாயிலில் வீரனின் தகப்பன் நின்றுகொண்டிருந்தான். சிவந்த கண்களுடனும் திடதேகத்துடனும் இருந்த தகப்பனுர் மூஞ்சியில் அன்று கோபம் ஜொலித்துக்கொண்டிருந்தது. காரணம், கடைக்காரன் அன்று அவனுக்கு கள் கொடுக்க மறுத்து விட்டதுதான். ஏற்கனவே அதிகரித்த கடனை அவன் அடைக்கவில்லையாம். ஏற்கெனவே எரிந்துகொண்டிருந்த கோபத்தில் ஊற்றிய எண்ணெபோ லிருந்தது மாடு மறைந்த செய்தி! வீரன் சென்ற காரியம் பயனடைந்ததா வென்று அவன் கேட்காமல் பையனின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு முரட்டுத்தனமாய் அடிக்க ஆரம்பித்தான். வயலுக்குப் போயிருந்த ஆத்தாள் இன்னும் திரும்பி வரவில்லை. பையனுக்குப் பரிந்து பேச அவளாவது இருந்திருக்கலாகாதா? தனக்குக் குடி யில்லாமற் போனதற்கு வீரனே காரணமென்று அப்பன் தனது வெறியில் கருதினான் போலும்! அடிமேல் அடி விழுந்து வீரனின் தேகத்தில் ஊமைக்காயங்கள். பாவம் அடி பொறுக்க மாட்டாது திமிறிக்கொண்டு திசை தெரியாது ஓட ஆரம்பித்தான். தன் தந்தைக்குப் பயந்து நெடுந்தூரம் ஓடிக் களைத்து ஓர் புதரருகில் விழுந்துவிட்டான்.

வலி சகிக்காது வருந்தி அழுதான். பசியும் வருத்தியது. காலைக் கஞ்சிக்குப் பிறகு அவன் ஒன்றுமே அருந்தவில்லை. பசுவையும் கன்றையும் மறந்தான். பிள்ளை வந்தால் என்ன செய்துவிடுவாரோ என்ற எண்ணம்கூட அவனுக்குத் தோன்றவில்லை. உடல் முழுதும் வீக்கமும் வலியும் !

இனிமேல் ஒரு கணமும் சகிக்க முடியாதென்று தோன்றியதும் அவன் தன் தாயை நினைத்து அலறினான். விசித்து விசித்துக்கொண்டு "அம்மா ! அம்மா !!" என்று கூவிக்கொண்டிருந்தான் வீரன். வீட்டில் அவனது தாயாருக்கும் உதை கிடைத்துக் கொண்டிருந்ததை அவன் அறிவானா. இந்தச் சமயத்தில் அவன் காதில் ஏதோ சத்தம் கேட்டது.

அவன் திடீரென எழுந்தான். திடுக்கிட்டான். வலி மறந்து போச்சு ! அது என்ன ! எதிரொலியா? ஏதோ "அம்மா" என்று கூப்பிடுவதுபோல் தோன்றியது. யாராயிருக்கக்கூடும்? ஒரு வேளை இருட்டில் உலாவும் பிடாரியோ மாரியாத்தாளோ என்று நினைத்தது அந்தப் பாமர மனது. அவ்விடத்தைவிட்டு ஓட ஆரம்பித்தான்.

தூரத்தில் நகரும் விளக்கொளியொன்று தெரிந்தது. அதை நோக்கியோடினான். ஒரு வண்டி; உள்ளே எசமான் இரத்தினம் பிள்ளை இருந்தார்.

"யாரடா அது ஓடுவது? வீரனா? இந்த வேளையிலே இங்கே என்னடா ஓடரே ?" என்று கேட்டுக்கொண்டே பிள்ளை வண்டியை விட்டு இறங்கினார். அவர் பூசிக்கொண்டிருந்த சந்தனம் வாசனை வீசியது. வீரன் திகைத்துச் சாலையின் ஓரத்திலே நின்றுகொண்டு விசித்து விசித்துக்கொண்டு நடந்ததையெல்லாம் உளறிக்கொட்டினான். பிறகு பிள்ளையின் கால்களில் விழுந்து மன்னிப்புக்கேட்டழுதான். பிள்ளைக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. ஆயினும் அன்றைக்கு அவர் நல்ல விருந்து சாப்பிட்டிருந்ததால் பையனை அதிகத் துன்புறுத்த எண்ணம் ஏற்படவில்லை.

" ஓகோ ! பசுவையும் தலைச்சுட்டுக் கன்னுக் குட்டியையும் காணோம்னு பொய் சொல்ரயா போக்கிரிப் பயலே ? தேடினயாடா? மேலத்தோப்பிலே பாத்தியா ?" என்று கூறிக்கொண்டே பிள்ளை வீரனை அணுகி அவன் காதைப் பிடித்துக் கிள்ளினார். அந்த சமயத்தில் "அம்மா அம்மா !" என்று முன்னே வந்த சத்தம் மறுபடியும் கேட்டது. வண்டிக்காரனை விளக்குடன் வரச் சொல்லி, பிள்ளை சத்தம் கிளம்பியவிடம் நோக்கி விரைந்தார்.

கைகள் மார்பில் கட்டிய வண்ணம் நடுங்கிக் கொண்டே வீரன் பின் தொடர்ந்தான். புதரை நெருங்கியதும் அவர்கள் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டனர். சப்பாத்துக்கள்ளிப் புதருக்கருகில் அந்தச்செவலைப் பசு நின்றுகொண்டிருந்தது; பிள்ளையின் செல்லப் பசு. வெளிச்சத்தைப் பார்த்ததும் அது "மா" என்று மீண்டும் கத்திற்று. உடனே அதே மாதிரி இன்னொரு மெல்லிய ஓசை கேட்கவே அவர்கள் புதருக்குள் பார்த்தார்கள். புதருக்கு நடுவில் வெற்றிடம் கொஞ்சமிருந்தது. அங்கே நின்றுகொண்டிருந்தது கன்றுக்குட்டி. தனது தாயையே நோக்கிக் கத்திக்கொண்டிருந்தது. பசுவும் தன் குழந்தையையே பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தது. வாயில்லாச் சீவன்கள்—இரண்டும் தங்கள் துரதிர்ஷ்டத்தை யுணர்ந்தன போலும் ! ஒன்று அன்பொடு கூவ மற்றது அழுவது போல் அரற்றியது. மந்தை வந்துகொண்டிருந்தபோது அந்த விஷமக் கன்றுக்குட்டி ஒரே துள்ளாகத்துள்ளிப் புதர் நடுவில் பாய்ந்துவிட்டதுபோலும். பத்மவ்யூகத்தைப் பிளந்து உட்புகுந்த அபிமன்யு பிறகு வெளி வர மாட்டாது திகைத்ததுபோல், இக்கன்றும் ஆதரவற்று அங்கேயே நிற்க வேண்டியதாகிவிட்டது.

புதர் சிறிதே. கணமும் தாமதியாமல் வீரன் உள்ளே குதித்து இளங்கன்றை மீட்டுக்கொண்டு வந்தான். எவ்விதமான அற்புத உணர்ச்சி, தாய்ப் பசுவை ஆபத்துக்குட்பட்ட அந்தக் கன்றிருந்த இடத்துக்குக் கொண்டு சேர்த்த தென்பதைப்பற்றிப் பிள்ளைக்குச் சிரத்தையில்லை. அவர் களிப்புடன் பசுவைத் தடவிக் கொடுத்தார். பசு தன் கன்றை அன்போடு நக்கிற்று.

ஆனால் கன்றின் மிருதுவான தேகத்தில் தைத்திருந்த முட்களை எடுத்துக்கொண்டிருந்த வீரனுக்குப் பரமசந்தோஷம் ஊறிவிட்டது.

கன்றை அன்போடு தடவிக்கொடுத்தான். கன்று நன்றியுடன் தன் முகத்தை அவனது அடிபட்டு இன்னும் வலிக்கும் தேகத்தில் தேய்த்தது. வீரன் அதைக் கட்டி அணைத்து "இப்படி வெஷமம் பண்ணலாமா நீ ?" என்று கேட்டான்.

"டே பயலே ! என்னடா அதோடு பேசறே ! அது பதில் சொல்லுமாடா ! உன்னைப் பிடிச்ச நல்ல காலந்தான் மாடும் கன்னும் கிடைச்சுது. அழாதேடா ! திருட்டுப் பயலே ! நாளைக்குப் பெரிய கன்னு குட்டியேத் திருவிழா ஜல்லிக்கட்டுக்குக் கூட்டிக்கிட்டு போறயா ?" என்று கூறி, பிள்ளை வீரனை எழுப்பினார்.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date style and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

BOOKS OF THE HOUR

	Rs.	A.
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar ...	1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism ...	0	2

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

டெலிபோன் சண்டை

(ஒரு ஹிந்திக் கட்டுரையைத் தழுவி ராஜாமணி எழுதியது)

'வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்' என்று பாடினார் தாயுமானவர். வேறொருவர் காணாமல் அவரோடு பேசுவதற்கு இயந்திரம் கண்டு பிடிக்கப் பட்டுளது. நமது சிரமத்தைக் குறைப் பதற்காக அந்த யந்திரம் கண்டு பிடிக் கப்பட்ட தென்கிறார்கள். அந்த யந்திரம் என் வீட்டிலும் ஒன்றுண்டு. அது தான் டெலிபோன்.

ஒருநாள் காலை பத்து மணி. என் மேஜையண்டை கடலை கொறித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். வேலையுமில்லை. பொழுதும் போக வில்லை. 'மனிதனுக்குச் சிரமத்தைக் குறைப்பது டெலிபோனா அல்லது சிர மத்தைத் தருவதா?' என்று ஓர் பலமான தர்க்கம் என் மனதில் எழுந்தது. எதிரே மேஜைமேலிருந்த டெலிபோனுக்கு யான் சொந்தக்காரன். அதற்காக மாதாமாதம் பணம் கொடுத்து வருகிறேனாதலால் அதை முழு உப யோகமும் செய்ய எனக்குப் பூர்ண உரிமையுண்டு. ஆகவே ரிஸீவரைக் காதில் வைத்துக்கொண்டு சாவியை முடுக்கினேன். அப்போது 'ஆடோமாடிக்' டெலிபோன்கள் வரவில்லை. ஒரு தரத்திற்கு ஒரு அணா என்ற கஷ்டமும் இல்லை. எத்தனை தரம் பேசினாலும் பேசலாம்; ஆகவே கூப் பிட்டேன். எக்ஸ்சேஞ்சில் இருந்த சட்டைக்காரப் பெண்மணி "நம்பர் பிளீஸ்!" என்று கேட்டாள். எனக்கு ரொம்ப சந்தோஷம். ஆனால் நான் யாரோடு பேசுவது என்று யோசனை தோன்றவில்லை. ஏதோ ஓர் நம்பரைச் சொன்னேன். கம்பிகள் சேர்க்கப் பட்டன.

"ஹல்லோ!"

"ஹல்லோ!"

"15ம் நெ. டெலிபோன், ஸார். நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்களோ?"

"அதிருக்கட்டும், நீங்கள் யாரென்று சொல்லும்".

"நம்பர் 15. பூட் அண்டு ஷூ மர்ச்சண்ட்" என்று தணிவான குரலில் கூறினார்.

"அப்படியா! சரி. நான்தான் கவர்ன் மெண்ட் கண்ட்ராக்டர் அஹ்மத்கான். டெலிபோன்நெம்பர் 22இலிருந்துபேசு கிறேன். எனக்கு ரண்டாயிரம் ஜதை ராணுவ பூட்சுகள் வேண்டும். கறுப்புத் தோல் என்ன விலை? எப்போது டெலிவரி செய்வீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் தொனியில் பரம சந்தோஷமும், வணக்க ஒடுக்கமும் குடிகொண்டிருந்தது.

"ஸார், 1½ மாதமாகும். ஜதை 12 ரூபாயாகும்." பிறகு பிரமாதமாகப் பேரப்பேச்சு நடந்தது. கடைசியாக "ஜதை 5 ரூபாய்க்குக் குறைந்து முடியவே முடியாது!" என்று கூறிவிட் டான். அப்போதுதான் எனக்குப் பரம சந்தோஷம். "ஐயா! நான் கண்டிராக்டருமல்ல; மூக்குடிராக்டருமல்ல. ஒரே ஒரு ஜதை 5 ரூபாய் விலைக்குத் தாருங்கள். அங்கு வந்து நேரில் வாங்கிக்கொள்கிறேன்!" என்று சொன்னேன்.

கடைக்காரனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

"டே சைத்தான்! நீ யாருடா? ஏமாத்திவிட்டாயே! ஒரு ஜதை-மிலிடரி பூட்ஸூ 5 ரூபாய்க்கா? என்ன போக்கிரித்தனம் பண்றே! எங்கேயாவது முடிச்சவிழ்க்கப் போயேன்!" என்று ஏதோதோ தர்மோபதேசங்கள் செய்ய ஆரம்பித்தான். என் சந்தோஷமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போச்சுது! இந்தக் கடைக்காரனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று தோன்றிற்று.

"அப்பா அப்பா! கோவிச்சுக்காதே. ஒரு ஜதை பூட்ஸூ என்ன விலைக்குத் தருவாய்?" என்று கீச்சுக்குரலில் கேட்டேன். 'டக்' என்று ரிஸீவரை வைத்து விட்டுப் போய்விட்டான்.

என் மனது கஷ்டப்பட்டது. கொஞ்சம் விஷமம் செய்து பொழுதைப் போக்கலாமென நினைத்தது. இன்னொரு நம்பர்க்காரரைக் கூப்பிட் டேன். "நீ யார்? நான் யார்?" என்ற குசல ப்ரச்னம் நடந்தது.

"நாங்கள் எலும்பு உடைப்பவர்கள்!" என்று கூறினார். நான் திடுக் கிட்டுப் போனேன். ஓகோ சர்க்கரை உற்பத்திக்கு எலும்புத் தூள் சப்ளை செய்கிற கம்பெனி யென்று அறிந்து கொண்டேன். மனதைத் திடஞ்செய்து கொண்டு,

"ஐயா, எங்களிடம் கொஞ்சம் எலும்பு இருக்கிறது வாங்கிக் கொள் வீர்களா?" என்று கேட்டேன்.

உடனே அவர் மிக்க கம்பீரமான குரலில் கனைத்துக்கொண்டு, "விலை எப்படி? எந்தத் தரத்து எலும்பு?" என்று கேட்டார்.

எலும்பு விலையை மணங்குக் கணக்கில் சொல்வதா, வாகன் கணக்கில் சொல்வதா என்று எனக்குத் தெரியாது. ஆகவே பொத்தாம் பொதுவாக,

"எல்லோரிடமும் என்ன விலைக்கு எடுத்துக் கொள்கிறீர்களோ அந்த விலைக்கே சப்ளை செய்கிறேன்" என்று சொன்னேன்.

"R. G. D. கம்பெனியிடமிருந்து 60 ரூபாய்க்கு இப்போதுதான் வாங்கினோம்" என்று கூறினார்.

"என்னிடம் முழுசு முழுசாய் எலும்புகள் இருக்கின்றன. வாகனுக்குச் சப்ளை செய்ய முதலில் அவைகளை உடைக்க வேண்டி யிருக்கும். ஆகவே ஒரு மிருகத்தின் எலும்புக்குச் சராசரி என்ன விலை தருவீர்கள் என்று சொல்லுங்கள்" என்று கேட்டேன்.

"என்னென்ன எலும்புகள்?" என்று கேட்டார்.

"மனித எலும்புகள்! நரி எலும்புகள்! எலி எலும்புகள்!" என்று குறும்பாகப் பதில் கூறினேன்.

"மடையா! உன் எலும்பை ஹல்லரில் கொடுக்கவும்" என்ற ஆசீர்வாதத்தோடு டெலிபோன் கனெக்ஷன் எடுக்கப்பட்டது.

எதிர்பாராத விதமாக எனது டெலிபோன் மணி அடிக்க ஆரம்பித்தது. யாரோ கூப்பிடுகிறார்களென்று நினைத்து ரிஸீவரைக் காதில் வைத்துக் கொண்டேன். "ஸார், அது வாடர் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டா?" என்று அந்தக் குரல் கேட்டது. சரி; தப்பிதமான நம்பரை எக்ஸ்சேஞ்சுக்காரர்கள் பிணைத்து விட்டார்களென்பது தெரிந்துவிட்டது. எதிர் பாராமல் கிடைத்த இதில் நமது கைச் சரக்கைக் காட்டி விடுவதெனத் துணிந்தேன்.

கனைத்துக்கொண்டு "ஹல்லோ யார் பேசரது?" என்று கேட்டேன்.

"நான்தான் கவர்ன்மெண்டு கண்டிராக்டர். ஏதோ ஆர்டர் கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்களாமே!"

"ஆமாம். கார்ப்போரேஷன் இனிப் பக்கத்து ஊர்களுக்கும் ஜலம் சப்ளை செய்யப் போகிறது. அதற்கு மிகமிக நீளமான குழாய் வேண்டும்."

"எத்தனை அகலம்? எத்தனை நீளம்?"

"மிகவும் அகலமாகவும் மிகவும் நீளமாகவும் வேண்டும்"

"எவ்வளவுதானிருக்க வேண்டுமென்று சொல்லுங்களேன்."

"எட்டடி குறுக்களவு; நீளம் 50 மைல்."

ஆச்சரியத்துடன், "எட்டடி குறுக்களவா? சரி, 50 மைல் குழாய் எவ்வளவு துண்டுகளாயிருக்கலாம்?"

"கூடாது. ஒரே துண்டுதான் வேண்டும்."

"என்ன, விளையாடுகிறீர்களா?"

"யாரையா விளையாடுவது? சப்ளை செய்ய முடியாது என்றால், கண்டிராக்டை விட்டுவிடுமே."

"ஓய்! நீர் யார்! என்ஜினியர் ஆபீஸ் அல்ல போலிருக்கிறதே!"

"யார் என்ஜினியர் என்று சொன்னது? சந்தேகமிருந்தால் நீங்கள் வேணுமானால் இங்கே வந்து பாருங்களேன்."

"நீர் யார் ஐயா? எங்கிருந்து கூப்பிடுகிறீர்?"

"இது நரகலோகம்! நான் யமதூதன்!" உடனே 'டப்' என்ற சத்தம் கேட்டது. கன்னெக்ஷன் போய்விட்டது.

அந்தப் பூட்ஸ் கடைக்காரப் பேர்வழி என்னை வைதானல்லவா, அவனை ஓர் கை பார்க்கவேண்டுமென்று நினைத்தேன். எக்ஸ்சேஞ்சுக் காரரைக் கூப்பிட்டு அந்த 15-ம் நெம்பரோடு 'கன்னெக்ட்' பண்ணுமாறு கேட்டேன்.

"யார் அது 22-ம் நெம்பர் காரரா?"

"ஆமாம்; பூட்ஸ் விலை சொல்லமாட்டீர்களா?"

"எய்! இந்த மாதிரி கலாட்டா பண்ணினால் 2600-ஐக் கூப்பிட்டுப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பச்சொல்லுவேன்."

"என்னப்பா, விலையைச் சொல்லிவிட்டுக் கோவிச்சுக்கோ."

"சே" என்று கூறிவிட்டு மறுபடியும் ரிஸீவரை வைத்துவிட்டான். இந்த மாதிரி நாலைந்து தடவை கூப்பிட்டபோதெல்லாம் வெகு துடுக்காகவே பதில் கூறினான். கடைசியாக ஒரு தடவை கூப்பிட்டபோது, எக்ஸ்சேஞ்சு ஆபீஸிலிருந்து பதில் வந்தது.

"ஐயா! நீங்கள் 15 நெம்பர்க்காரரை மிக்க தொந்தரவு செய்கிறீராம். அவர் ரிபோர்ட் செய்தார். ஆகவே உம்முடைய கன்னெக்ஷனை அவருக்கு வைக்கக் கூடாதென்று துரை உத்தரவு செய்திருக்கிறார்" என்பது அந்தப் பதில். நான் அதற்குப் பதில் சொன்னதாவது:

"ஹல்லோ! நான்தான் நிஜமான ஆள் பேசுகிறேன். நான் நேற்றைக்கு வேட்டைக்குச் சென்றிருந்தேன். டெலிபோன் ரூம் திறந்திருந்தது. குழந்தைகள் அறியாமல் விஷமம் செய்து விட்டனபோலிருக்கிறது. அவரிடம் நானே மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து சேருங்கள்!"

உண்மையென்று டெலிபோன் ஆபரேடர் நம்பிச் சேர்த்து வைத்தார். 'ஹல்லோ, ஹல்லோ' ஆயிற்று.

"ஐயா மன்னிக்கவேண்டும். நான் ஊருக்கு வெளியே போயிருந்த சமயத்தில் என் டெலிபோனை என் மூத்த பையன் அக்கிரமமாக உபயோகித்திருக்கிறான். எக்ஸ்சேஞ்சு ஆபீசில் சொன்னார்கள். அந்தப் பயலை இழுத்துக் கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன். நல்ல பூசை கொடுக்கப் போகிறேன்."

"ஸார்! அப்படி ஒன்றும் வேண்டாம், ஸார். குழந்தைகள் அப்படித்தான். நீங்கள் இதற்காகப் பையனை அடித்தால் என்னை அடிப்பதுபோலத்தான்."

நான்:—"உங்களிடம் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறதே அந்தப் பயலின் விஷமத்தால்!"

அவர்:—"கிடக்கட்டும். கோவித்துக் கொள்ளாதீர்."

நான்:—"உங்கள் தயைக்கு வந்தனம். தயவு செய்து பதில் சொல்ல முடியுமானால் ஒரு கேள்வி."

அவர்:—"ஒன்று என்ன? பத்துக் கேள்வி கேளுங்கள்."

நான்:—"சரி, அப்படியானால் தயவு செய்து ஒரு ஜதை பூட்ஸின் விலையைச் சொல்லுங்கள்."

உடனே அவருக்கு மறுபடியும் கோபம் வந்து திட்ட ஆரம்பித்தார். நான் ஒரு அடிக்கின்ற அலாரம் டைம்பீஸை எடுத்துப் போன் வாயில்வைத்துவிட்டேன். பாவம்! சத்தத்தில் அவன் காது 'கொய்' யென்று போயிருக்கும்.

இந்த விளையாட்டை எனது நண்பர்களில் சிலரும் அறிந்துகொண்டு அவனைப் புரளி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு நண்பர் 15-ம் நெம்பர் போன்காரரைக் கூப்பிட்டார்.

"நான்தான் கமிஷனர் பேசுவது? அங்கேயிருந்து ஹெட்கான்ஸ்டபிளை அனுப்பவும்" என்று கூறுவார்.

"ஸார்! இது போலீஸ் ஸ்டேஷனல்ல, ஸார்! இது ஒரு பூட்ஸுக் கடை" என்று கடைக்காரர் பதில் சொல்வார்.

"சரி! அப்படியானால் ஒரு ஜதை பூட்ஸின் விலை என்ன?" என்ற கேள்வி போடப்படும். கடைக்காரன் வாயாரத் திட்டிவிட்டு ரிஸீவரை வைத்துவிடுவான்.

இப்படிப் பல நண்பர் பல தடவை புரளி பண்ணவே, அந்தக் கடைக்காரன் அந்த வீட்டையே காலிசெய்துவிட்டுப் பத்துநாளில் போய் விட்டானும். "பூட்ஸின் விலை என்ன?" என்று யார் கேட்டாலும் உடனே அவன் யாரோ போக்கிரிகளென்று நினைத்து வையத்தொடங்குவான். அப்படிச் செய்தால் அவனுக்கு பூட்ஸு விற்கு மில்லையா? இப்படியாக அந்தச் சண்டை ஒருவாறு ஓய்ந்தது.

விஷயம் எவ்வாறோ டெலிபோன் ஆபீசுக்கு எட்டி என் போன் கன்னெக்ஷனையே ஒருநாள் வந்து எடுத்துச் சென்றார்கள். அதையிழந்த பின்பு, பொழுது போவதற்கு என்ன செய்வது என்றறியாது விழித்துக் கொண்டு கிடக்கிறேன்.

மகாத்மா காந்தி எழுதிய

		ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	....	0	6	0
மகா தியாகம்	....	0	4	0
அனாசக்தி யோகம்	....	0	4	0
ஹிந்து தர்மம்	....	0	2	0
கீதா போதனை	....	0	2	0
உத்தம வாழ்க்கை	....	0	2	0
ஆரோக்கிய வழி	....	0	4	0
நீதி தர்மம்	....	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	....	2	0	0

மேல் மாடி

(திப்பு எழுதியது.)

விஷயம் இவ்வளவுதான். மேல்மாடி சரியாயிருக்கிற மனிதனுக்குத்தான் இந்த உலகத்தில் வாழ்வு. மனிதனின் அவயவங்களில் மேல் மாடிக்கு இருக்கிற மதிப்பு வேறெந்த அவயவத்துக்கும் கிடையாது. "அவன் மூளைலே மோட்டார் ஓட!" என்று நவீனமான ஓர் வசவு வழங்குகிறதே அதைக் கேள்விப்பட் டிருக்கிறீர்களா?' சுத்தத் தருதலை' என்று இகழ்கின்றார்களே அப்போதும் தலைக்குள்ளிக்கும் சாமானுக்குத்தான் கவுரவம். "அவன் கெட்டுப் போனதற்குக் காரணம் என்ன தெரியுமா? மண்டைக் கொழுப்பு!" என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் மண்டை கொழுத்தவர்கள் தான் இந்த உலகில் பெரும் புகழ் பெற்றார்க ளென்ற விஷயத்தையும் நான் விஞ்ஞாபனம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு மனிதனின் அறிவை அவனது மூளைக் கனத்தைக்கொண்டேநிர்ணயிப்பது ஓர் வகை சாஸ்திரம். மூளையின் கனம் அதிகமாக ஆக வேகமும் அதிகமெனக் கூறுகிறார்கள். ஆங்கில மகா கவிகளுள் ஒருவரான பைரனின் மூளை 60 அவுன்ஸ் இருந்ததாம். ஐரோப்பியத் தர்க்க சாஸ்திரிகளில் சிறந்த காண்ட் என்பவருக்கு 55 அவுன்ஸ் எடையுள்ள மூளையாம். டர்ஜனீவ் என்ற ருஷிய நாவலாசிரியனுக்கு 67 அவுன்ஸ் மூளையிருந்ததாம். சாதாரண ஐரோப்பிய மூளை 45 அவுன்ஸ்தான் இருக்கிறதாம். இன்னொரு ரகஸ்யம் காதோடு-(ஐரோப்பிய ஸ்திரீகளுக்குச் சராசரியாக 40 அவுன்ஸ் தான் இருக்கிறதாம்) ஐரோப்பிய பாஷையில் இதைச் சொன்னால் அந்தத் தேசத்து ஸ்திரீகள் என் மீது மான நஷ்ட தாவாப் போட்டாலும் போடுவார்கள். மகா நாடுகளில் கண்டனத் தீர்மானம் செய்தாலும் செய்வார்கள். ஆகவே கொஞ்சம் தைரியத்தோடு, தமிழில் சொல்லலாமல்லவா? தமிழ்ப்பெண்களைக் குற்றங் கூறுதவரை நான் பயப்பட வேண்டாமல்லவா?

இந்தப் புள்ளி விவரங்களை எங்கிருந்து பெயர்த்துக்கொண்டு வந்தேனென்று நீங்கள் கேட்கலாம். நான் கத்தியும் தராசும் எடுத்துக்கொண்டு பைரன் மூளையைச் சோதிக்கச் செல்லவில்லை. ஐரோப்பாவில் வியன்னா நகரத்தில் ஓர் 'மூளைச் சாலை' இருக்கிறது. உலகத்தில் புகழ்பெற்ற அநேக பெரியார்களின் மூளையை அங்கு சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்த டாக்டர்கள் வெளியிட்ட பிரசுரத்தினின்று எடுத்த குறிப்புத்தான் நான் மேலே தந்தது.

'குருவி மண்டை' 'மாங்காய்த் தலையன்' என்று தமிழ் நாட்டில் சில வழக்கு மொழிக ளிருக்கின்றனவே அவை நல்ல மொழிகளா? 'குருவிபோன்ற இன்னிசையும், விடுதலை வாழ்க்கையும் உடையவனே' என்ற அர்த்தத்திலா சொல்கிறார்கள்? 'மாங்காய்போன்ற ரஸமான ஊறுகாய்ச் சாமானே!' என்ற புகழ் மொழியையா கருதுகிறார்கள்? "அபாரமான மண்டை விசுவேசர அய்யாவுக்கு!" என்று சொல்கிறார்களே, அதற்கு வேறு தினுஸான அர்த்தம். இவ்வாறு மேல் மாடியைப்பற்றி வியாக்யானம் செய்கின்ற வார்த்தைகள் எவ்வளவோ உண்டு.

'ஏமாற்றி விட்டான்' என்று சொல்வது ருசிகரமாக இல்லை யென்று நினைத்து 'அவன் தலையிலே கை வைத்து விட்டான்' என்று சொல்கிறார்கள். பஸ்மாசுரன் சிவன் தலையில் கை வைக்கப்போன கதையைத் தழுவி இந்தப் பதம் சிருட்டிக்கப்பட்டி ருக்கவேண்டும். அப்போது பாவம் சிவபிரான் கொஞ்சம் சொகுஸான நிலைமையில்லாதா னிருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் தலையில் கை வைக்கப்போவானா பஸ்மாசுரன்!

'தலையிலே குல்லா போடுவது' என்று ஓர் வழக்கு மொழி. நாதிர்ஷா காலத்திலிருந்து இந்த மொழி வழக்கத்துக்கு வந்தது என்று முன்னொரு தடவை சொல்லப்பட் டிருக்கிறது. இப்போது வெள்ளைக்காரர் வந்த பிறகு 'தலையிலே தொப்பி கவிழ்த்து விட்டான்' என்று ஓர் வழக்கு மொழி வந்திருக்கிறது. எத்தனையோ பேர் இப்போது தொப்பி கவிழ்த்துக் கொண்டு போகிறார்களே அவர்கள் ஏன்மீது கோபங் கொள்வதில் பிரயோசன மில்லை.

'நெற்றியில் நாமத்தைப் போட்டான்' என்று இன்னொரு வழக்கு மொழி. இது குறும்பாகச் சிருட்டிக்கப்பட்ட மொழியென்றே தோன்றுகிறது. உள்ளேயுள்ள மூளையை வசியம் செய்ததற்கு அறிகுறியாகவே நெற்றியிலே நாமத்தை யிட்டான் என்ற வார்த்தையும் பிரயோகிப்படுகிறது. மனித சரீரத்தில் இந்த மேல் மாடிக்கு ஏற்பட்டுள்ள மகத்துவமே மகத்துவம்!

'மண்டையிலே என்ன களிமண்ணா?' என்று ஓர் பிரயோகம். இந்த வார்த்தை ஆதிகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் அமுதம் கடைந்த காலத்திலிருந்து அமுலி லிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது லட்சுமி தோன்றினளாம். அவளை விஷ்ணுவுக்குக் கொடுத்தார்களாம். பிறகு கற்பத்தரு தோன்றிற்றும். அதை இந்திரனுக்குத் தந்தார்களாம். விஷம் வந்ததாம். அதைச் சிவனிடம் தந்தார்களாம். இப்படி ஒவ்வொரு சாமானாகத் தோன்றிய சாமான்களை ஒவ்வொருவருக்குக் கொடுத்தார்களாம். கடையும் போது கடைசியில் மொத்தை மொத்தையாகக் களிமண் புறப்பட்டதாம். அதை என்ன செய்வதென்று தேவர்களுக்குத் தெரியவில்லையாம். அவைகளை உலகிலுள்ள மனிதர்களுக்கு விநியோகம் செய்வதென்று இரு சாராரும் தீர்மானித்தார்கள். அந்தக் களிமண் 'ஸ்டாக்' இன்னும் ஏராளமாக இருக்கிறது. எத்தனையோ மனிதர்கள் எத்தனையோ தலைமுறையாக அந்தச் சாமானை வாங்கி மேல் மாடியை நிரப்பி நிரப்பி வந்திருந்தும் இன்னும் ஸ்டாக் இருப்பதாகக் கேள்வி.

கதரை அணியுங்கள்

மோப்பத் தொழில் மும்முரம்

ஐரோப்பாவில் இப்போது மோப்பத் தொழில் வெகு மும்முரமா யிருக்கிறது. ஒவ்வொரு நகரிலும் பிற தேசத்து வேவுகாரர்கள் நிறைந்திருக்கின்றனர். இராணுவத்திற்கு என்னென்ன புதிய சாமான்கள் சேகரிக்கப்படுகின்றன வென்பதை அறிவதிலும், கப்பல்களைப் பற்றி விவரம் தெரிவதிலும், இதர முஸ்தீப்புகளைப் பற்றித் துப்பறிவதிலும் பல்லாயிரக் கணக்கான பேர் மும்முரமா யிருக்கின்றனர்.

தனியாய் வேலை செய்யும் ஒற்றர்கள் உண்டு. கூட்டங் கூட்டமாய் வேலை செய்வோருண்டு. இன்னொரு தேசத்து ஒற்றனைத் தொடர்ந்து செல்லும் வேறொரு தேசத்து ஒற்றர் கூட்டமுண்டு. தேசபக்தியினாலேயே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுண்டு. நல்ல சம்பளம் தரும் தேசத்திற்கு வேலை செய்யும் ஒற்றத் தொழிலாளிகளு முண்டு. இந்த வேலை மிக மிகக் கஷ்டமானது. ஆகவே நல்ல சம்பளம் உண்டு. சுமார் 5 லக்ஷம் ஒற்றர்கள் ஐரோப்பாவில் உலாவிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 1933-ம் வருஷத்தில் மட்டும் ஐரோப்பாவின் தேசங்களில் 300 மோப்பக்காரர் குற்றஞ் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட் டிருக்கின்றனர்.

பிரான்ஸின் எல்லைப்புற இராணுவ முஸ்தீப்புகளை மோப்பம் பிடித்து அலைந்த ரைன்லாண்ட் கோஷ்டியைச் சமீபத்தில்தான் கைது செய்தார்கள். அந்தக் கோஷ்டிமீது குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டது. இன்னொரு பெரிய கூட்டத்தைக் கைது செய்து தண்டிக்கப் பிரஞ்சு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

சமீபததில் வேறு தேசத்து ஒற்றர் படையொன்று கைது செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் படைக்குத் தலைமை வகித்தவள் ஒரு பெண். லிடியா ஸ்டாஹல் என்பாள் ஒரு ருஷியப் பெண். எத்தனையோ பாஷைகளை வெகு தெளிவாகப் பேசுகிறாள். நகருக்கு நகர் அடிக்கடி நகர்ந்து கொண்டே யிருந்தாள். இன்னொருவள் வெகு அழகான மாது. ஒரு அமெரிக்க ஆகாய விமானியின் மனைவி. அவளும் அவளது புருஷனும் இப்போது கைதியா யிருக்கின்றனர். இந்தத் துப்பறியும் படையில் பல்கேரியர்கள், ஜர்மானியர்கள், ருஷியர்கள், பிரஞ்சுக்காரர், ஜப்பானியர் முதலிய பலரும் சேர்ந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கதைகளிலெல்லாம் ரசமான கதை ஸோபி என்பவளுடையதாகும். ஜர்மானியின் எல்லையில் ஒரு சாராயக்கடையில் அவள் வேலை செய்வது போல அபிநயித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய புருஷன் பிரான்ஸில் இருந்தபோது அவனைக் கண்டுபிடித்துப் பிரஞ்சு அரசாங்கம் நாடு கடத்திவிட்டது. ஸோபி ஒரு பிரஞ்சு இளைஞனையே மோப்பம் பிடித்து அலைந்துகொண் டிருந்தாள். அந்த இளைஞனிடமிருந்து புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட ஓர் பீரங்கியைக் கைப்பற்றித் தன் புருஷனிடம் கொண்டு போக 'ஸோபி' முயற்சித்தாள். அப்போதுதான் கைது செய்யப்பட்டாள். இந்தச் சூழ்ச்சிக்கு உடந்தையாயிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

வேற்று நாட்டு வேவுகாரர்களில் சிலர் மகா கேவலமான மூட்டை சுமக்கும் தொழிலில்கூட அமர்ந்து ஏமாற்றி விடுகின்றனர். இப்போது பிரான்ஸில் சுமார் 60 அந்நியர்கள் மோப்பக் குற்றத்துக்காகக் கைதியாகக் கிடக்கின்றனர். அவர்களில் அநேகர் பெண்கள் என்பதுதான் வெகு வெகு ருசிகரமான இரகஸ்யம். இந்தத் தொழிலில் மிக்க சாமர்த்திய முடையவர்கள் பெண்களே யென்பது இதனின்றும் தெரிகிறது.

இதுவரை யிருந்த வேவுகாரர்களிலெல்லாம் மிகவும் சாமர்த்தியசாலி யெனக் கொண்டாடப்பட்ட மாதா ஹரி ஓர் ஸ்திரீதானே! தன்னுடைய தளிர்போன்ற மேனியைக் கொண்டு எத்தனையோ தேசத்து இராஜீயவாதிகளை அவள் ஏமாற்றி விட்டாள். அவளை ஒரு 'இந்திய நாட்டிய மாது' என்றே பலர் எண்ணிக்கொண் டிருந்தனர். கடைசியில் வெகு அற்பமாக அவள் ஆயுள் முடிந்தது. அவளைத் தண்டித்துத் துப்பாக்கிப் படையின் முன் நிறுத்திச் சுட்டு வீழ்த்தினார்கள். அவளுக்குப் பிறகு இந்தத் தொழிலில் ஐரோப்பாவில் பெண்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர். -பிரீபிரஸ் தபால்.

பிராப்தம்

(C. N. G. சர்மா.)

'இது யாருக்குத் தெரியாது? இதைப்பற்றியும் எழுதவேண்டுமா' என அவசரக் குடுக்கையான சிலர் நினைக்கக்கூடும். ஆனால் தெரிந்தவைகள்தான் எழுதப்படுகின்றனவே தவிர, புதிதாக எந்த விஷயமும் எழுதப்படவாவது, பிரசுரிக்கப்படவாவது இல்லை. அவ்வளவுதான் பத்திரிகைகளுக்குப் பிராப்தம். ஆகையால் அவசரக் குடுக்கைகள் இக் கட்டுரைதான் நமக்குப் 'பிராப்தம்' என்று நினைத்து இதை வாசித்த பின்னர் சொல்வார்களேயானால், அவ்வளவுதான் எனக்குப் 'பிராப்தம்' என்று நானும் சந்தோஷமா யிருந்துவிடுகிறேன்.

நமது தேசத்தில் இந்த வார்த்தைக்குள்ள மகத்துவம்வேறு எப்பதத்திற்குமில்லை. ஏன் கறுப்பாயுள்ளவனுக்குச் செவப்புப் பெண் வாய்க்கிறாள்? ஏன் பெரிய பரீக்ஷைகள் பாஸ் செய்த பின்பும் உத்தியோகம் கிடைக்காது சிறுவர்கள் திண்டாடுகிறார்கள்? ஏன் என் கட்டுரைக ளெல்லாம் பத்திராதிபர்களால் பிரசுரிக்கப்பட வில்லை? பீகாரில் மட்டும் பூகம்பம் உண்டாகிக் கெடுதல் விளைவிப்பானேன்? இவை போன்ற எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். அதுதான் 'பிராப்தம்' என்பது.

இப்பதம் இவ்வளவு ஜாஸ்தியாகப் பிரயோகப்படுவானேன்? இது இப்பதத்தினது பிராப்தம். பிரயோஜனமற்ற யாதொரு கருத்துமில்லாத நிழல்போன்ற விஷயங்களைப் பிரசுரித்திருப்பதின் காரணமும் அவைகளின் பிராப்தமே. அக் கட்டுரைகளைப்பற்றி நமக்கும் பத்திராதிபர்களுக்கும் "அபிப்பிராய பேத" மேற்படுவானேன்? அவ்வளவுதான் எங்களுக்குப் பிராப்தம்.

காரணங் கூற முடியாத சகல நிகழ்ச்சிகளுக்கும் காரணங் கூறுவது போல அபிநயித்து, சகல மூல காரணமாகப் பெரியோர் எடுத்துக்கூறும் வல்லமையுள்ளது இப்பதம். சாஸ்திரங்களுணர்ந்தோர் என்ன சொன்னாலென்ன? பீகாரிலுண்டாகிய பூகம்பம் மாங்கயருக் கடுத்த ஊரில் இல்லாமற் போவானேன்? அது அவ்வூரின் பிராப்தமே யன்றி வேறல்ல. தெரிந்திருந்

தால் நீங்கள் சொல்லலாம்; அது போனால் போகட்டும்.

'பார் அட்லா' பாஸ் செய்து நன்கு சொற்பொழிவில் திறமை வாய்ந்த காந்தியடிகள் துணியையும் தோற்று விட்டுத் திரிந்துகொண்டிருப்பானேன்? உணவெல்லாந் துறந்து பட்டினி கிடப்பானேன்? இவ்வளவுதான் அவருக்குப் பிராப்தம். கோடீசுவரனான மோதிலாலின் மைந்தன் ஜவஹர் சிறை வாசத்தில் கட்டுண்டு கிடப்பானேன்? அதுதான் அவருடைய பிராப்தம். ஒரே சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த சாஸ்திரிகள் அர்த்தபேதங் கல்பித்துக் கொண்டு போர் புரிவானேன்? எத்தனையோ கோடி ஜனங்களுள்ள இந்நாட்டில், கால்பங்குக்குமேல் பட்டினி கிடப்பானேன்? அவ்வளவுதான் இவர்களுக்குப் பிராப்தம்.

பார்த்தீர்களா இப்பதத்தின் வல்லமையை? ஈசுவரன் போல் எதற்கும், இப்பதம் ஆதிகாரணமா யிருக்கின்றதல்லவா? 'ஐயா! காவேரி நிரம்ப வெள்ளம் போனாலும் நாய் நக்கித்தானே குடிக்கவேண்டும்,' என்பார்கள், பதின்மூன்றும் பசலிப் பேர்வழிகள். இப்படியே "தேசத்தில் ஒற்றுமை யில்லையே? 'செல்வமெல்லாஞ்' செல்வோமென்று, செங்கடல் தாண்டி விடுகிறதே. எல்லாரு மொருமித்த மனத்துடன் ஒற்றுமையா யிருப்பின் முன்னேற்றமடைந்து, அடிமை நீங்கலாமே" என்றால், மேற்கூறிய பதின்மூன்றும் பசலித் தாத்தா திண்டில் சாய்ந்து தொந்தியைத் தடவிக்கொண்டு, "என்ன ஐயா! பிதற்றுகிறீர்? நமக்கு இவ்வளவுதான் பிராப்தம். வெள்ளையர்களுடைய வல்லமை நமக்கில்லையே யென்றால், நமக்கது பிராப்தமில்லை யென்றுதான் சொல்ல வேண்டும்" என்று சொல்லி விட்டுக் கண்மூடி விடுகிறார்.

இவ்வார்த்தையின் சர்வ சக்தியை என்னவென்பது! இப்பதம், ஒரு காரியமும் செய்யமுடியாது நம்மை, அடக்கிவிடுகிறது. இப்பதம் செய்கையையே வேரறுக்கும் வாள். முன்னேற்ற மென்பதே நடைபெறாது முற்றுகை போட்டிருக்கும் முள்வேலி. நற்செய்கை, தர்மம், இவைகளைப் புதைக்கும் மண்மாரி. மனத்தின் ஊக்கத்தை மாற்றுவிக்கும் மாயமருந்து. நம்மை விட்டு இப்பதம் எப்பொழுது அகலுமோ, அன்றுதான் நம்தேசஞ் சிறப்புற்றோங்கும்.

புத்தன் துறவு

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது.)

18712

[சாதாரண மனித வாழ்க்கையினின்று விலகித் தியாகமும் உலக சேவையுமே குறியாகக் கொண்டு ஒளி மைந்தனொருவன் துறவு பூணும் அந்தக் காட்சி இருக்கின்றதே அதன் பெருமை சொல்லத் தரமன்று. அந்தப் புனிதமான கட்டத்தை கவிகள் தத்தம் பிரதிபையில் தோன்றும் வண்ணம் சித்தரிப்பார்கள். பகவான் புத்தனின் துறவு பூணும் காட்சியைப் பற்றியும் நூற்றுக்கணக்கான கவிஞர் பாடிச் சென்றார்கள். எட்வின் ஆர்னல்டின் ஆசிய ஜோதி என்ற நூலில் இந்தக் கட்டம் வெகு அழகாகப் பாடப் பட்டிருக்கிறது. தமிழ்க் கவிஞருள் ஒருவரான ஸ்வாமி சுத்தானந்த பாரதியாரும் இந்தக் காட்சியைப் பாடியிருக்கிறார். சமீபத்தில் பிரசுரமாகிய பாரத சக்தியில் இதே பாட்டுக்கள் வேறு விதமாக மாற்றி அமைக்கப்பட்டிருப்பினும் பாலபாரதியில் தோன்றிய பழைய அமைப்பே வெகு அழகாக இருந்ததென்று சிலர் நினைக்கின்றோம். —சங்கு. ஸுப்ரஹ்மணியன்.]

அயிற் சுவை ஆடல் பாடல் அழகுறு பெண்கள் தாங்கத்
துயிற் சுவை, துகளில் மாதர், தோட்சுவை யணிகள் மின்னும்
மயற் சுவை வெறுமை யென்றே மனத்தினில் வெறுத்தான்: ஞான
வுயர்ச் சுவை யெண்ணுவோர்க்கும் உலகியற் சுவை பாங்காமோ?

* * *

வாடிய மலரும், தூய வாரியிற் புயலின் நீழல்,
வீடிய இலைகள் கண்டே விழியினின் றருவி பாய்ச்சிச்
சேடியர், மனைவி, மக்கள், திருவொடு மின்னு மின்பும்,
நாடக வுலகச் சீர்; போம் நமன்விடு திரைக்குள்! என்றான்.

* * *

கண்ணுற்றான் வயது மூத்துக் காலனை வணங்கி யாடி
மண்ணுற்ற வாழ்க்கை தன்னை வழுத்திடுங் கிழவன் சோர்ந்து,
"விண்ணுற்ற புகழோய்! நீயிவ் வேடமும் நடிப்பாய்," என்ன
எண்ணுற்றான்; போலிப்பூவின் இருள் மருங் கறிய லுற்றான்.

* * *

"சோகுறும் உலகின் தீதைத் துயருடன் எண்ணி யிந்த
மோகுறு நொய்ய இன்பை முடித்துமே யுலக முய்யத்
தாகமே யானேன்: நீத்துத் தக்கதோர் மருந்தை நாடிப்
போகிறேன், உறங்குங் கண்காள்! புகலுமின் விடை!" யென்பானே.

* * *

பொன்னெலாம் புவியின் மாசு; பொருளெலாம் பொன்றும் மண்ணே;
பெண்ணெலாம் பிணியின் தூது; பிறப்பதும் இறப்பின் நேசன்;
மண்ணெலாம் அகந்தை; இந்த மாயையில் மோதலுற்றால்,
புண்ணலால் வேறொன்றில்லை; போகிறேன் அடவி! என்றான்.

—பால பாரதி.

Rambles in Vedanta

BY

B. R. RAJAM AIYAR

THE variety of the *pabulum* presented in this volume will be found pleasant and delicious both by the young and the advanced. While every morsel it contains is nutritious and easy of assimilation, not a few delicacies will be discovered which are exquisitely spiced and flavoured with stories and illustrations from the Puranas. The aim which runs through all—from the short fancy of Suka's advent to the long life-tale of Vasudeva—is the realisation of the Self, the knowledge of the Atman the elaboration and impression of the sublime truth taught by all religions, by the Vedas and the Puranas by the hoary sages of antiquity, by the Lord Sri Krishna, and reiterated by the Lord Jesus Christ in those hallowed words which will live for ever —" What shall it profit a man, if he shall gain the whole world and lose his own soul ?"

RS. 5

Swathantra Sangu Book Depot

Triplicane :: Madras.

Courtesy : Buy Indian.

யுத்த காலப் பொய்கள்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

யுத்த காலத்தில் இரண்டு விஷயங்களைப் பற்றிப் பொய்க் கதைகள் கட்டிவிடப்பட்டன. ஒன்று, ஜெர்மன் ஸயின்ஸைப் பற்றி; மற்றது, ருஷ்ய போல்ஷ்விக் இயக்கத்தைப் பற்றி. ஜெர்மானியர் சகல வழிகளிலும் ஸயின்ஸைப் பயன்படுத்தினர்கள். இதைப் பார்த்து எரிச்சலடைந்தார்கள் ஜெர்மனியின் விரோதிகள். ஜெர்மானியர் பிரேதங்களை யெல்லாம் குவித்து, அவற்றிலிருந்து அநேக விதமான சாறுகளை இறக்கி, அந்தச் சாறுகளைக் கொண்டு பல சாமான்கள் தயாரித்து வருவதாக, இந்த விரோதிகள் ஒரு கதையைக் கட்டிவிட்டார்கள். எதற்காக? ஜெர்மனிக்கு விரோதமாக உலக ஜனங்களுக்கு ஆத்திர முண்டாகச் செய்து, ஜெர்மனியை அடிபணியச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான். இதைப் போலவே, ருஷ்யப் பொது உடைமை இயக்கக்காரர்களுக்கு விரோதமாகவும் ஒரு புளுகைக் கட்டிவிட்டார்கள். போல்ஷ்விக் இயக்கக்காரர்கள் இல்லற தர்மத்தை ஒழித்துவிட்டார்கள் என்றும், இஷ்டப்பட்ட ஸ்திரீகளுடன் இஷ்டப்பட்ட சமயத்திலெல்லாம் வரைமுறையின்றிப் புருஷர் உறவு கொண்டு வாழலாம் என்று ஏற்பாடு செய்துவிட்டார்களென்றும் எதிரிகள் கதை கட்டிவிட்டார்கள். ஒரு பொய்க் கதையைக் கிளப்பிவிட்டால், நீண்ட காலம் அது ஜனங்களிடம் உலவி வருகிறது. பொய் என்று எவ்வளவு தெளிவாக நீங்கள் நிரூபணம் செய்தாலும் சரிதான், இந்த மாதிரி பொய்கள் திரும்பத் திரும்ப உயிர் பெற்று நடமாடிக்கொண்டே யிருக்கின்றன.

பொது உடைமை ராஜ்யத்தில், நிலம் எல்லாருக்கும் சொந்தமான பொதுச் சொத்தா யிருக்கும் என்று நான் சொன்னேன். "அப்படியானால், பெண்கள் விஷயமென்ன!" என்று ஒருவர் கேட்டார். புருஷர்கள் ஆண்டு அனுபவிக்கத் தோன்றிய சொத்துக்களில் பெண்களும் ஒரு இனம் என்று அவர் நினைப்புப்போல் இருக்கிறது! பெண்களையும் இதர உடைமைகளைப் போல் எண்ணுவது பெருந் தவறாகும். சொத்தை யெல்லாம் ராஜாங்கத்தின் உடைமையாக மாற்றுவதால் பெண்களையும் அப்படியே தேசப் பொது உடைமையாக மாற்றிவிட வேண்டுமோ என்று நினைப்பது பிசகு. பெண்கள் சுதந்திரமானவர். புருஷர்களைப் போலவேதான் அவர்களுக்கும் ஆத்மாவும் அறிவும் உண்டு. எப்படி ஒரு புருஷன் இன்னொருவனுக்கு அடிமையாக விருக்கக்கூடாதோ அதே மாதிரிதான் ஒரு பெண்ணும் இன்னோர் பெண்ணுக்கோ, மனிதனுக்கோ சொந்தமான உடைமையா யிருக்கக் கூடாது. ஆகையால், அவர்களைத் தேசத்தின் பொது உடைமையாகச் செய்துவிடுவார்களோ என்ற கேள்வி எழுதுவதற்கே இடமில்லை. ஆனால், மனித சுபாவத்தைக் கவனித்தால், விவாகமும் இல்லற வாழ்க்கையும் இருந்தே தீரும் என்பது தெரியவரும். மேலும், விலங்கினங்களைப்போல் இல்லாமல், மனிதர்கள் தங்கள் குழந்தைகளை நீண்ட காலம் பாதுகாத்து வளர்க்கவேண்டியது அவசியமா யிருக்கிறது. பசுவின் கன்றைப் பாருங்கள், பிறந்தவுடனேயே அது துள்ளிக் குதித்து ஓட ஆரம்பித்து விடுகின்றது. நமது குழந்தைகளால் அப்படி முடியாது. மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள இந்த வித்யாசத்தை நாம் கவனிக்க வேண்டும்.

கண்டிப்பான சட்ட திட்டங்களுக்குட்பட்டுக் கற்பு வாழ்க்கையை நடத்தும் மனிதர்கள் ஒரு விதமாய் மனோராஜ்யம் செய்துகொண் டிருக்கிறார்கள். வரன் முறையற்ற ஸ்திரீ புருஷ உறவுடன் வாழ்வதில் மிகுந்த இன்பங்களிருப்பதாக அவர்களின் நினைப்பு. ஜெயிலி லுள்ளவர்கள், தித்திப்பான தின்பண்டங்கள் வெகு உருசியாயிருப்பதாக நினைத்துக்கொண் டிருக்கிறார்களல்லவா, இதே போலத்தான் அவர்கள் எண்ணமும். ஆனால், தித்திப்பான மிட்டாய் வகைகளை உங்கள் ஆகாரமாக வட்டித்துக்கொண் டிருந்தால், பழைய சாம்பாரும் குழம்பும் எப்பொழுது கிடைக்கும் என்று ஆசைப்படுவீர்களல்லவா? இந்த மாதிரிதான் வேசைகளும், தவறான வாழ்க்கை நடத்தும் பெண்களும், விவாகம் செய்துகொண்டு, ஸ்திரமான கற்பு வாழ்க்கையை வாழ விரும்புகிறார்கள். இல்லற வாழ்க்கை என்பது, மனித சுபாவத்தில் நிரந்தரமாக இடம் பெற்றிருக்கும் ஓர் அங்கமாகும். ஆனால், ஒரு ஸ்திரீயின் விருப்பத்திற்கு விரோதமாய் வலுக்கட்டாயம் என்பது கூடாது. அந்த நிர்ப்பந்தம் போய் விடும். நிர்ப்பந்தமில்லாமல் நடக்கும் இல்லற வாழ்க்கைதான் இயற்கைக்கு ஒத்தது. பொது உடைமை ராஜ்யத்தில் விவாக விலக்குச் செய்துகொள்ளுவது சுலபமாயிருக்கும் என்பது உண்மைதான். ஆனால், ஒரு தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளிடம் பெருகும் வாஞ்சை, விவாக விலக்கு ஆசையைத் தானாகவே எதிர்த்து நிற்கும். விவாக விலக்குகளின் எண்ணிக்கை பெருகிவிடாது. அது பெருகாமல் தடுப்பது சட்டமல்ல, மனித சுபாவமே தடுக்கும். நண்பர்கள் தவறாக

நடந்துகொண்டால் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய உரிமை இருக்கிறது; அதனால், அவர்கள் பரஸ்பரம் ஜாக்கிரதையாகவும் அன்போடும் நடந்து கொள்ளவில்லையா? இதே மாதிரிதான், விவாக விலக்கு உரிமையிருப்பதால் ஸ்திரீ புருஷர்களும் பரஸ்பரம் ஜாக்கிரதையாகவும் அன்புடனும் நடந்து கொள்ளுவார்கள். அவர்கள் நேசம் அபிவிருத்தியடையுமே ஒழிய, குறை பட்டுவிடாது.

பொது உடைமை ராஜ்யத்தில், குழந்தைகளின் தாய் தந்தைகளும், தேச ஊழியர் என்ற முறையில்தான் நடந்து கொள்ளுவார்கள்; குழந்தைகளைச் சரியான முறையில், பாதுகாத்து வளர்ப்பார்கள். ஆகையால், இல்லற வாழ்க்கை, பொது உடைமை ராஜ்யத்திலும் இருந்தே வரும். ஒரு தகப்பனார் தன் குழந்தையைச் சரியான முறையில் போஷித்து வளர்க்காவிட்டால், பொது உடைமை ராஜாங்கம் அந்தக் குழந்தையைப் பராமரிப்பதற்கு வேண்டிய சரியான ஏற்பாடுகளைச் செய்வதுடன், தந்தையின் அசிரத்தைக்காக அவருக்குத் தண்டனையும் விதிக்கும். இன்று தினம் நான் என் குழந்தையை நன்றாக வளர்க்கத் தெரியாமல் பூசை கொடுத்தேனானால், சர்க்கார் அதில் தலையிட முடியாது. என்னைக் கோர்ட்டுக்கு இழுப்பார்களானால், "இவன் என் மகன். இவன் ஒரு 'மைனர்'ப் பையன். என் இஷ்டப்படியெல்லாம் அவனை நான் நடத்துவேன். நான் அவனை உதைப்பேன். யார் என்னைக் கேட்பது?" என்று நான் சொல்ல முடியும். பொது உடைமை ராஜ்யத்திலோ இந்தச் சங்கதி பலிக்காது. ஏனெனில், பொது உடைமை ராஜாங்கத்தில், தேசத்தால் நியமிக்கப்பட்ட ஒரு 'கார்டிய'னைப் போலவே என் குழந்தையிடம் நான் நடந்து கொள்ளவேண்டும். குழந்தையை என்னிஷ்டப்படி யெல்லாம் நடத்தும் உரிமைகள் எனக்கு இருக்காது. எனவே, பொது உடைமை ராஜ்யத்திலும் மனைவி மக்களோடு கூடிய இல்லற வாழ்க்கை இருந்து வரும். ஆனால், இல்லற வாழ்க்கையின் நல்ல அம்சங்கள் அப்படியே இருந்து வர, கெட்ட அம்சங்கள் தொலைந்து போம்; அவற்றிற்குத்தான் இடமிராது.

[இது Chats Behind Bars என்ற புத்தகத்தினின்று எடுத்தது.]

ஜப்பான்காரன் சுறு சுறுப்பு!

இந்த ஜப்பான்காரன் சுறு சுறுப்பைப் பார்க்கப் பார்க்க திக்பிரமையேற்படுகிறது. சில்லறைச் சாமான் முதல் பெரிய சாமான்வரை சகல வஸ்துக்களையும் அந்தச் சின்னத் தீவில் உற்பத்தி பண்ணிக் கப்பலிலேற்றித் தேசம் தேசமாய்க் கொண்டுபோய் மலிவாக விற்றுவிட்டு வந்துவிடுகிறார்களே அவர்களுடைய திறமையை என்னென்பது.

பௌண்டென் பேனாவைப் பையில் மாட்டிக் கொள்வதுதான் நாஜுக்கென்று தற்காலத்தில் உலகில் எல்லாத் தேசத்து மனிதர்களும் எண்ணுகிறார்கள். அதை அறிந்து கொண்டான் ஜப்பான்காரன். இப்போது ஜப்பானில் பௌண்டன் பேனாத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஒவ்வொரு முக்கியமான ஊரிலும் இருக்கின்றன. 1920ல் தான் இந்தத் தொழிலை ஜப்பானில் முதன் முதல் ஆரம்பித்தார்கள். 1930ல் $2\frac{1}{2}$ லட்சம் டஜன்கள் பேனாவைத் தயாரித்து வெளி நாட்டுக்கு அனுப்பிற்று ஜப்பான். இது குடிசைத் தொழிலாக அந்தத் தேசத்தில் இருப்பதால் எச்செலவும் போக 3 அணாவுக்கு இந்தியாவில் விற்பதற்கு அவர்களுக்குக் கட்டுகிறது. இதில் வேடிக்கை யென்னவென்றால் ஜப்பானியப் பவுண்டன் பேனாக்கள் இன்றைக்கு இங்கிலாந்தில் மலிவாக ஏராளமாக விற்பனையாகிறதாம். பிரான்ஸில் விற்கப்படுகிறதாம். மேனாடுகளுக்குப் பௌண்டன் பேனா ஏற்றுமதி வருஷா வருஷம் உயர்ந்துகொண்டு மிருக்கிறதாம்.

சமீபத்தில் ஜப்பானில் மோட்டார் உற்பத்தி செய்யவும் தொழிற்சாலைகள் வைத்துவிட்டார்கள். தென்னாப்பிரிக்காவுக்கு இந்தப் புது மோட்டார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். அந்தச் சர்க்கார் அதிகச் சுங்கவரி போடாமலிருப்பார்களானால் 60 பவுனுக்கு ஒரு மோட்டார் வீதம் விற்பார்களாம். இதே மாதிரி ரேடியோ சாமான்களையும் எலெக்டிரிக் சாமான்களையும் மிகமிக மலிவான விலையில் ஜப்பான் தயாரித்து அனுப்பிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு சுறு சுறுப்புக்கும் மூல காரணமென்ன? ஜப்பான் சுதந்திர நாடு! தேச பக்தர்கள் அந்தத் தேசத்தை ஆளுகிறார்கள்.

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

பைக்கிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.

வண்டிக்காரப் பொன்னன்

(பாபு எழுதியது)

இவனைப் பார்க்க இச்சிப்பவர்கள் குறைந்தது நான்கு ரூபாயாவது செலவு செய்யவேண்டி வரும். இத்துடன் ஓர் இரவு முழுவதும் தூக்கமின்றி மூட்டைப் பூச்சிகள் நிறைந்த ஓர் ரயில் வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டும். இவ்வளவும் சகித்துச் சென்ற பிறகு ஆறு மைல் தூரம் ஓர் மோட்டார் வண்டியில் கரடு முரடான ரோட்டில் பிரயாணம் செய்ய வேண்டி யிருக்கும். இதற்குள் உயிர் போகாம லிருந்தால், இரண்டு பர்லாங்கு நடந்து ஆரணி ஜட்கா ஸ்டாண்டை அடைந்தால், கொடுத்து வைத்தவர்களுக்கு அவன் தரிசனம் கிடைக்கும். சாயங்கால வேளை வரையில் காத்திருந்தால் கட்டாயம் ஊருக்கு ஒரு மைலுக்கப்பாலுள்ள ஒரு கள்ளுக் கடையில் அவனைக் காணலாம்.

அந்த ஊர்ப் பக்கம் போகும் போதெல்லாம் நான் பொன்னனை—அந்த வண்டிக் காரனைப் பார்க்காமல் போவதில்லை. ஏனெனில், அவன் வண்டிக்காரர்களிலேயே ஒரு தனி ரகம். அவனிடம் என்ன அற்புத குண விசேஷங்களைக் கண்டேனென்று கேட்பீர்கள். முதல் தடவை நான் அவனைச் சந்தித்ததையும் அவன் வண்டியில் சவாரி செய்ததையும் பற்றிச் சொல்கிறேன், கேளுங்கள்.

“எங்கே சாமி போவணும்?” என்றான் வண்டிக்காரன்.

“கங்காபுரத்திற்கு” என்றேன் நான்.

“சரி! ஏறுங்கசாமி! போவலாம்!” என்றான்.

“அது சரிதானப்பா! கூலி பேசிக் கொள்ள வேண்டாமா” என்றேன்.

“அதற்கென்ன சாமி! உங்களுக்குத் தெரியாதா?” என்று அலக்ஷியமாகச் சொன்னது அவன் பணத்தைத் திரணமாக மதிப்பதுபோல் தோன்றிற்று.

“அப்படியல்ல அப்பா! முன்னாலே பேசிக் கொள்வது நல்லது பார்” என்றேன்.

“ஆமாம் சாமி! நீங்க பாத்துக் கொடுத்ததை வாங்கிக்கிறேன்” என்றான். ஆனால் இந்தச் சாமார்த்தியத்தினால் நான் ஏமாந்து விடவில்லை.

“அப்பா! பின்னாலே தகராறு கூடாது! உன் கூலியைச் சொல். சம்மதப் பட்டால் பேசிக் கொள்ளுகிறேன்” என்றேன்.

“சாமி! அப்படியெல்லாம் தகராறு பண்ரவன் நானில்லே சாமி!”

ஒவ்வொரு வண்டிக்காரனும் இந்தப் பல்லவி பாடுவதுண்டு. ஆனால் கடைசியில் பிரியும்போது தகராறு என்ற மங்களமும் பாடாது போகமாட்டார்கள்.

“ஒரே பேச்சு சாமி! மூனு ரூபா குடுப்பீர்களா?” என்று சொல்லிக் கொண்டே குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து வண்டியை முன்னுக்குக் கொண்டுவந்தான்.

“இதோ இருக்கிற ஊருக்கா மூன்று ரூபாய்?” என்றேன் நான்.

“கஷ்டத்தைப் பாக்கணும் சாமி! எட்டு மைல் போவணும். திரும்பி வரபோது காலியா வரணும். உங்களுக்குத் தெரியாதா சாமி!” என்று பணிவாகச் சொன்னான்.

அந்த ஊருக்கு அவன் தந்த நற்சாட்சிப் பத்திரமெனை நான் நினைத்தேன்.

“அதெல்லாம் சரிதான்! ஒரே பேச்சாசொல்லு” என்றேன்.

“போனாப் போவுது! இரண்டு ரூபா வைச்சுக்கோங்க சாமி! விளக்கு வைக்காத்துக்குள்ளே கொண்டுபோய் விட்டேரேன்” என்றான்.

“ஒன்றரை ரூபாய்தான் தருவேன்.” என்று கறாராய்ச் சொன்னேன்.

“சாமி! நீங்களே இப்படிச் சொன்னா எப்படி சாமி! கூலியில்லியா சாமி! எங்கே அடிச்சாலும் பட்டுக்கலாம் சாமி; வவுத்துலே அடிக்காதீங்க சாமி!” என்று மன்றாடினான். வண்டிக்காரர்களின் இந்த ‘வவுத்துலே அடிப்பது’ என்ற வார்த்தை அடிக்கடி அவர்கள் பிரசங்கத்தில் தோன்றும். வவுத்துலே அடிப்பது சவாரி செய்யும் எஜமான் என்பது அவர்களெண்ணம்.

“தொலைந்துபோ! ஒன்றேமுக்கால் ரூபாய் வைத்துக் கொள்” என்றேன் நான்.

“நாலணாவைப் பார்க்காதீங்க சாமி! எவ்வளவோ செலவு பண்ரீங்க! இது பெரிசா உங்களுக்கு! ஏழை பாருங்க! வாயில்லாச் சீவன் பாருங்க” என்று குதிரையைக் காட்டிக் கெஞ்ச ஆரம்பித்தான். முடியவே முடியாது என்று நான் மறுக்கவே, கடைசியில் அந்த வாயில்லாச் சீவனின் சார்பாகவும் தன் சார்பாகவும் சம்மதித்தான். நானும் தாயாரும் வண்டியிலேறினோம். வண்டியும் புறப்பட்டது.

குதிரை சற்று மெள்ளவே ஓடிற்று. மாலைப் பொழுதும் குறைந்து கொண்டே வந்தது.

“ஜல்தி ஓட்டடா! இருட்டிப் போகுதடா” என்றாள் எனது தாயார்.

“அம்மா! கூலியைமாத்திரம் சரியாக் குடுத்துடச் சொல்லுங்க” என்று சொல்லிக் கொண்டே குதிரையை விரட்ட ஆரம்பித்தான்.

சுமார் ஒரு மைல் தூரம் வந்ததும் வண்டி நின்றுவிட்டது.

“என்னடா?” என்றேன்.

“நாலணாக் குடுங்கசாமி! ஊட்டுலே குடுத்துட்டுவரேன்” என்று பல்லைக் காண்பித்தான். கொடுத்ததுதான் தாமதம். வண்டியை விட்டிறங்கி ஒரு குடிசையினுள் நுழைந்தான். கால் மணி நேரம் கய கய கயா. பிறகு வெளிக்கிளம்பி வந்தான். சற்றுக் கவனித்துப் பார்த்ததில் அவன் குடித்து விட்டு வந்ததுபோல் தோன்றிற்று. அதான் அவன் வீடோ? எனக்குப் பயம் எடுத்துக் கொண்டது. ஏதாவது அதிகமாகப் பேசினால் குடி வெறியில் அடிக்க வந்து விட்டால் என்னடா செய்வது என்ற திகில்வேறு. இந்த நாட்டுப்புறத்து வண்டிக்காரர்களைப் பற்றிப் பல கதை கேட்டிருக்கிறேன். ஆகவே ஒன்றும் பேசாமலிருந்தேன்.

நேராகக் குதிரை முகத்தண்டை போய் ‘உப், உப்’ என்று ஊத ஆரம்பித்தான். குதிரை சற்றுப் பின்வாங்கியது. விடாமல் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு அதன் மூக்கினுள் ஊத ஆரம்பித்தான். “என்னடா இழவு இது! இதற்குள்ளா குடி வெறி தலைக்கேறி விட்டது” என்று யோசனைப் பண்ணிக் கொண்டே யிருக்கையில்,

“என்ன பாக்கிரீங்க சாமி! ஒண்ணும் பயப்படாதீங்க. வண்டிக்காரப்

பொன்னன்னு இந்தப் பக்கத்திலே எல்லாருக்கும் தெரியும்" என்றான்.

நாம் உயிருடனிருந்தா லல்லவா இவனைப் பற்றிப் விசாரிக்கப் போகிறோம் என்று எண்ணிக் கொண்டேன். மறு நிமிஷம் வண்டியும் புறப்பட்டது. குதிரை வேகமாக ஓடிற்று. எனக்கும் ஆச்சரியமாகவே யிருந்தது. திடீரென்று,

"சாமி! என்னை மன்னிக்கனும் குடிச்சுவிட்டு வந்தேன்" என்றான்.

"நீ பணம் கேட்டதுமே எனக்குத் தெரியும்" என்று பகட்டாகப் பதிலுரைத்தேன்.

"நான் சொன்னா நம்பமாட்டீங்க! இந்த மாதிரி குடிச்சூட்டு நான் வண்டி ஓட்டினதே கிடையாது சாமி! தாயார் போல அம்மா உக்காந்திருக்காங்களே வண்டியிலே, எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு சாமி" என்றான்.

"ஏண்டா பின்னே குடிச்சே?" என்றேன்.

"இல்லே சாமி! இருட்டாவரத்துக் குள்ளே ஊருக்குப் போவணுமே சாமி; குடிக்காக்கட்டிப்போனா குதிரையை அடிச்சு ஓட்ட மனசு வராது சாமி!" என்றான்.

"ஆமாம்! குதிரை மூக்கிலே கள்ளையாடா ஊத்தினே" என்றேன்.

"இல்லே சாமி! நம்ப குதிரைக்குக் கள் வாசனை காட்டினா வேகமா ஓடுங்க சாமி! இப்ப பாருங்க எப்படி ஓடுது!" என்று குதிரையை விரட்டினான். வண்டியும் பறக்க ஆரம்பித்தது.

"ஏண்டா! தினம் இந்த மாதிரி குடிக்கரத்துக்குப் பணம் கிடைக்கிறதா? வண்டிக்காரருக்குப் பணம் கட்டவேண்டாமா? வீட்டுச் செலவுக்குப் பணம் வேண்டாமா" என்று கேட்டேன்.

"ஆமாம் சாமி! தினம் அரை ரூபாய் கட்டணுஞ் சாமி! இப்படித் தினம் குடிக்க முடியுமா சாமி! பாரி சவாரி மாட்டிக்கிச்சானா என்பாடு மஜாத்தான் சாமி! அண்ணிக்குக் குதிரைக்கும் குஷி பண்ணீடுவேன்" என்றான். குதிரையும் மூக்கில் கள் நாற்றம் வீசுவதால் ஏற்பட்ட வெறியினாலோ என்னவோ வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

அரைமணி மௌனம். சற்று மயக்கம் ஏற்பட ஆரம்பித்தது. உள்ளே திரும்பிப் பார்த்தான். எனது தாயாரின் முகத்தைக் கண்டான். உடனே எனது தாயார் தன் முகத்தை, வேறு புறம் திருப்பிக் கொண்டாள். பொன்னன் முகத்தில் களிப்புத் தோன்றிற்று.

"அம்மா என்மேலே கோபமாயிருக்காங்கபோல் இருக்கு! ஏழை! நாங்க கஷ்டப்படறது அம்மாளுக்குத் தெரியுமா? திரும்பிவரக் கொள்ள தனியாவரணும். பயம்! இந்த மொந்தைகள் அப்போ தைரியங் கொடுக்குங்க. எங்களுக்கு வேறே என்ன சாமி இருக்கு? ஐயமாருங்களல்லாம் காபி கீபி கூடிக்கிறீங்க. நம்பளேப் போல ஏழைங்களுக்குக் கள்ளுதான் சாமி" என்று அவனை அறியாமலே ஏதோ பிதற்ற ஆரம்பித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் மௌனம். சீக்கிரத்தில் ஊரையும் அடைந்தோம். எனக்கும் சற்றுத் தைரியம் பிறந்தது.

வீடு சேர்ந்ததும் இரண்டு ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். பொன்னன் உடனே,

"சாமி! நமக்கு வேண்டாம் சாமி! கடைக்கு நாலணா கொடுத்தீங்களே!" என்றான். "என்ன ஆச்சரியம்! வண்டிக்காரன்! அதிலும் குடிவெறி! உண்மை பேசுவதா!" என்று எனக்குத் தோன்றியது. உடனே அவன்மேல் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டது.

"பரவாயில்லே! கஷ்டப்பட்டதிற்காக வைத்துக் கொள்" என்று சொன்னேன்.

குடித்துவிட்டு வண்டி ஓட்டியதற்காக மறுபடியும் ஒருமுறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வண்டியிலேறிக் கொண்டான்.

"டே அப்பா! இன்னைக்கி நம்ப நரி முவத்துலே முழிச்சோம்டா! அப்பா ஓடு ஊட்டுக்கு" என்று குதிரையைப் பார்த்துச் சொன்னது தகப்பனார் தனது அருமைச் செல்வனிடம் கொஞ்சுவதுபோ லிருந்தது. வண்டியும் புறப்பட்டது. அடுத்த நிமிஷம் ஒரு தில்லானாப் பாட்டுக் காதில் விழுந்தது. பொன்னனையும் பொன்னனது குதிரையையும், அவர்களுக்குள்ளிருந்த அன்பையும் பற்றி நினைத்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தேன். வண்டிக்காரருக்கு இல்லாத ஒரு அரிய குணத்தை இந்தப் பொன்னனிடம் நான் கண்டதால் இவனுக்குப் பத்திரிகையிலும் ஒரு இடம் தந்து விடுவதெனத் தீர்மானித்தேன்.

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

கதரையே கட்டுங்கள்

அன்பே தீர்ப்பு

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் எழுதியது

இனிமேல் யாரேனும் ஒரு மகான் வந்து மனிதர் சாகாமல் நூறாண்டேனும் பயமில்லாது வாழக் கூடிய மருந்தும் உபாயமும் உலகத்துக்குக் காட்டலாம். மனிதன் பாவத்தை விட்டால் அமரத் தன்மை அடையலாம். பாவத்தின் சம்பளம் மரணம் என்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது. பாவத்தை நீக்கி மனிதன் மரணத்தை வெல்லக்கூடிய காலம் வரலாம். ஆனால், இப்போதுள்ள நிலைமையில் மனிதன் இந்த உலகத்தில் வாழ்வது சதமில்லை. 'இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பர் என் றெண்ணவோ திடமில்லையே' என்று தாயுமானவரும் சொன்னார்.

எங்கிருந்தோ வந்து இவ்வுலகத்தில் சில நாள் வாழ்கிறோம். செத்த பிறகு நம் கதி என்ன ஆகுமோ கடவுளுக்குத்தான் தெரியும். மூன்றே முக்கால் நாழிகை உயிர் வாழ்வதில் சந்தோஷத்துடன் இருந்து விட்டுப் போகக் கூடாதா? அடடா! இந்தப் பூமியில் மனித உயிருக்கு எத்தனை கஷ்டம், எத்தனை பயம், எத்தனை இடையூறு, எத்தனை கொலை, எத்தனை துரோகம், எத்தனை கொடுமை, எத்தனை அநியாயம்! ஐயோ பாவம்!

அடா, மனிதர்களே, எத்தனையோ சாஸ்திரங்களுக்கும், ஆக்கினைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் நாம் மனதார உட்பட் டிருக்கவில்லையா? ஒரு புதுக் கட்டுப்பாடு செய்து கொள்வோம்! அந்தக் கட்டுப்பாடு யாதெனில்:—"ஒருவனுக் கொருவன் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை. ஒருவனுக் கொருவன் பயப்படுவதும் இல்லை."

மானிடரே, இந்த விரதத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். இதுதான் பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும்போதே முன்பின் தெரியாத மனிதர்கூட ஒருவருக் கொருவர் கோபம் அல்லது அவமதிப்பு அல்லது பயத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள். மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலைமையில் உங்களுடைய மூடத்தனமான மனித நாகரீகம் வந்து சேர்ந் திருக்கிறது. இதை மாற்றி அன்பை மூலாதார மாக்கவேண்டும்.

முதலாவது, சிலருக்குச் சோறு மிதமிஞ்சி யிருக்கப் பலர் தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்துவிட வேண்டும். இது இலக்கம் ஒன்று. பூமியின்மீதுள்ள நஞ்செய், புஞ்செய், தோப்பு, துரவு, சுரங்கம், நதி, அருவி, குப்பை, செத்தை, தரை-கடவுளுடைய சொத்தில் வேலி கட்டக்கூடிய பாகங்களை யெல்லாம் சிலர் தங்களுக்குச் சொந்தமென்று வேலி கட்டிக்கொண்டனர். பலருக்கு ஆகாசமே உடமை; வாயு ஆகாரம்! இதற்கு மருந்தென்ன வென்றால் எல்லோரும் ஸமானம், அண்ணன் தம்பி போலே, என்ற புத்தி உண்டாகி ஏழைகள் வயிறு பசிக்காமல் செல்வர் காப்பாற்ற வேண்டும். அது முடியா விட்டால், ஐரோப்பாவில் அபேதவாத (ஸோஷலிஸ்ட்) கட்சியார் சொல்வதுபோல நிலத்தைச்சகலருக்கும் பொதுவென்று ராஜ்யவிதி செய்து கொள்ளவேண்டும்.

மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆஹாரம் பூமிதேவி கொடுப்பாள். பூமி தேவியின் பயனை நேரே கையாளத் தெரியாமல் பொறாமையாலும், அறியாமையாலும், தாறுமாறாக விழல்படுத்தி, சோறு தேடும் நேரத்தில் சோறு தேடாமல், ஒருவருக் கொருவர் கொல்ல வழி தேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு ஜீரணசக்தி யில்லாமல் போக, மனிதர் பரிதாபகரமாகக் காக்கையிலும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீணே நசித்துப் போகிறோம். ஏழைகள் வருந்தினால் நமக்கென்ன என்று நினைப்பவர் பரம மூடர். பலர் அசௌகர்யப் படும்வரை சிலர் சௌகர்யமடைதல் இந்த உலகத்தில் சாத்தியமில்லை. பொருளாளி நல்ல உடுப்புகள் அணிந்துகொண்டு தெருவில் உலாவுவதையும், அவனுடைய கன்னத்தில் சதை உப்பியிருப்பதையும், அவனுடைய ஏவலாட்களின் தொகையையும், சிறுமையையும், மேற்படி பொருளாளி பிறரை அவமரியாதை செய்வதையும் கண்டு மயங்கிப் போய், அவன் பரமானந்த நிலையில் இருப்பதாக நினைக்கின்றான். அது தவறு; அவன் மனத்தில் ஒளிந்து கிடந்து, அவனுயிருக்கு நரக வாதனை செய்யும் துயரங்களை ஏழை அறிய மாட்டான். ஒரு வகுப்பின் மனம் மற்றொரு வகுப்புக்குத் தெரியாமலும் ஒருவனுடைய உள்ளம் மற்றொருவனுக்குத் தெரிய இட மில்லாமலும் மனித நாகரீகம் அவ்வளவு மூடத்தன நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

வறுமையின் பயன்

ஏழையின் அழுக்குத் துணியையும், அழுக் குடம்பையும், சிரைக்காத முகத்தையும் பார்த்துப் பொருளாளியின் குழந்தைகள் மேற்படி ஏழையைத் தமது மனித பதவிக்குத் தாழ்ந்த பன்றி, நாய், மாடு வகுப்பைச் சேர்ந்தவன் என்று நினைக்கிறார்கள். ஐரோப்பாவில் ஏழைக்கும் பொருளாளிக்கும் விரோதம் முற்றிப்போய், உள் நாட்டுச் சண்டைகள் நேரிட்டன. அப்படி நேரிடாதபடி தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜனங்களை உள் நாட்டில் ஒன்று சேர்க்கும் பொருட்டாக, வெளி நாடுகளின் மீது சில ராஜாக்கள் மீது போர் தொடங்கக் கண்டங்களில் போர் பரவியும், பூமண்டலம் தூள் தூளாகிறது. கிழக்குத் தேசங்களிலும், யுத்த மில்லாமல் சமாதானத்துடன் இருக்கும் இடங்களிலும், திருஷ்டாந்தமாக, நமது தமிழ்நாட்டுப் பறையர்கூடக் கண்விழித்துத் தாங்கள் மனிதர் என்பதைத் தெரிந்து கொண்டு மற்ற ஜாதியாருக்குத் தாங்கள் சமானமென்று சபைகூடித் தீர்மானம் செய்கிறார்கள். கிழக்குத் தேசங்களில் சமாதான எல்லைகளில்கூட ஏழைகளுக்குக் கண்திறந்து பொருளாளிகளை எதிர்க்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சுருங்கக் கூறுமிடத்தே சோற்றுக்காக மனிதர் ஒருவருக் கொருவர் செய்துகொள்ளும் அநியாயம் நாய்களும் பன்றிகளும் தமது ஜாதிக்குள்ளே செய்யும் வழக்கமில்லை யென்பது

லோகப் பிரசித்தமான விஷயம். ஆங்கில பாஷையில் பைரன் என்ற மஹா கவி ஒரு சமயத்தில் மனிதர்களை நாய்களே என்று கூவினார். பிறகு உண்மையில் மனிதரைக் காட்டிலும் நாய் ஜாதி மேம்பட்டதாகையால் மனிதரை நாய்களே என்று சொல்லியதிலிருந்து நாய் ஜாதிக்கு அவமரியாதை செய்வதாக ஏற்படுமாதலால், அதை மாற்றி மறுபடி 'ஏ, மனிதரே!' என்று கூவிவிட்டார்.

தீர்ப்பு.

அன்புதான் இதற்கெல்லாம் தீர்ப்பு. எல்லா மனிதருக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும், வெள்ளைக்கும், மஞ்சளுக்கும், செம்புக்கும், கருநிறத்து நீகிரோவருக்கும், சகலருக்குள்ளும் பரமாத்மா, பரம புருஷன் ஆகிய நாராயணனே அந்தர்யாமியாக நின்று வெளித் தொழில்களை நிகழ்த்துகிறான். ஆதலால், மானிடரே—ஸஹோதர உணர்ச்சியே தீர்ப்பு. ஸஹோதர உணர்ச்சியைப் பற்றிக் கவிதைகள் பாடுவதும், நீதி நூல்களில் புகழ்வதும் வர்த்தமானப் பத்திரிகைகளில் கர்ஜனை செய்வதும் இவ்வுலகத்தில் வெகு சாதாரணமாக இருக்கிறது. நடையில் எந்தக் கண்டத்திலும், எந்த மூலையிலும் அந்த உணர்ச்சி காணப்படவில்லை. அது நடைக்கு வரவேண்டும். கண் இல்லாதவன் வான சாஸ்திரம் படிக்க முடியாது. இன்பமோ அன்புலகத்தைச் சேர்ந்த பதார்த்தம். ஆதலால் அன்பில்லாவிடின் இன்பமில்லை. இன்பத்தைத் தேடித் தேடி எங்கும், எப்போதும் எதனிலும் காணாமல் வருந்துகிற மானிடரே கேளுங்கள்.

அன்புண்டானால் இன்பமுண்டென்று புத்த பகவான் கண்டுபிடித்துச் சொன்னார். அந்த யுக்தியின் மகிமையை நேரே மனிதர் தெரிந்துகொள்ளாமல் அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்துவருகிறார்கள். அன்பு கொள்கையில் இருந்தால் போதாது; செய்கையில் இருக்கவேண்டும். உன்னிடம் ஒரு கோடி ரூபாய் இருந்தால் அந்த ஒரு கோடி ரூபாயையும் தேச நன்மைக்காகக் கொடுத்துவிட்டு நீ ஏழையாகிவிடத் துணிவாயானால் நீ தேசத்தின்மீது அன்புடையவனாகக் கருதப்படுவாய். உன்னுடைய குழந்தையின் உயிரைக் காக்கும் பொருட்டாகப் புலியின் வாயில் நீ போய் முதலாவது கையிடத் துணிவாயானால், நீ குழந்தையிடம் அன்டையவனாகக் கருதப்படுவாய். பறையனுக்கு ஸ்நானம் செய்வித்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டால் நீ மனித ஜாதியினிடம் அன்புடையவனாக விளங்குவாய்.

எல்லா ஜந்துக்களிடத்திலும் ஆரம்பப் பழக்கத்துக்கு, எல்லா மனித உயிர்களிடத்திலும் தெய்வபக்தி காண்பித்தால் உலகத்தின் துயரங்கள் தீர, நியாயமான ஜனவகுப்பு ஆரம்பமாக ஹேது உண்டாகும்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்தத் தொகை ரூ.8,13,60,271

மொத்த ஐவேஜிகள்	....	ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள்	....	ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்."
362, சைனா பஜார் ரோட்,
எஸ்பிளனேட், மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைஸிங் செக்ரடரி,
171, புதுத் தெரு,
மதுரை.

இருந்தும் கெடுத்தான்—செத்தும் கெடுத்தான்

பிரான்சு தேசத்தில் ஸ்டாவஸ்கி என்ற ஜகஜ்ஜாலப் புரட்டன் செய்த மோசடிகளையும், அவனது சாவையும் பற்றி முன்னொரு தடவை 'சங்கி'ல் வெளி வந்திருந்தது. ஸ்டாவிஸ்கி செய்தமோசடிகளின் பயனைப் பிரஞ்சு அரசாங்கமே தடுமாற நேரிட்டதும் சொல்லப்பட்டிருந்தது.

ஸ்டாவிஸ்கி செய்த மோசடிகளுக்கு அநேக அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பெரிய பெரிய பணக்காரர்களும் உடந்தையாயிருந்தனரென்று பின்னால் அரசாங்கத்துக்குத் தெரிய வந்தது. அவ்வப்போது லஞ்சமாக எவ்வளவு எவ்வளவு பணம் யார் யாருக்கு ஸ்டாவெஸ்கி கொடுத்தான் என்பதைக் காட்டுவதான 'செக்' புத்தகத்தின் பகுதி அரசாங்கத்தினிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டதாம். அதன் மூலமாகத் துப்பறிந்து எங்கெந்தப் பேர்வழிகள் எவ்வள வெவ்வளவு லஞ்சம் வாங்கினர்களென்பதை அரசாங்கம் பகிரங்கமாக அறிக்கை வெளியிடப் போகின்றதாம். 1200 செக்குப் புத்தகத் துண்டுகள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனவாம்.

ஸ்டாவெஸ்கி மோசடியைப் பற்றி விசாரணை செய்து கொண்டிருந்த மாஷியர் பிரின்ஸ் என்ற நீதிபதி அநேக குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விட்டாராம். அவர் தமது ஆராய்ச்சியை உலகுக்குப் பகிரங்கப் படுத்துவதற்கு முன் அவர் பிணமாக்கப்பட்டு விட்டார். யார் அவரைக் கொன்றது என்பது புலன் தெரியவில்லை. ஒரு நாள் அவரது பிரேதம் ரயில் பாதையில் கிடந்தது. அவரை யாரோ அன்று காலை வேறு போக்குக் காட்டி மோட்டாரில் அழைத்துச் சென்றதாகவும் புலன் விசாரித்ததில் தெரிந்தது. இந்த மரணத்தினின்று ஸ்டாவெஸ்கி மோசடி வெளியாகாமலிருப்பதற்காக எத்தகைய துணிச்சலான காரியத்தையும் செய்வதற்கு மறைமுகமான ஒரு கூட்டம் இருந்து வருகிறதென்று ஏற்படுகிறது.

ஆராய்ச்சி செய்யச் செய்ய ஸ்டாவெஸ்கியின் போக்கிரி மூளை எவ்வளவு யுக்தி வாய்ந்தது என்பது வெளியாகின்றது. அடகுக் கடை நடத்துவது, நாடகக் கொட்டகைகளை ஏலமெடுப்பது இவைகளைக் காட்டிலும் மிக்க தந்திரமான ஓர் மோசடியில் ஸ்டாவெஸ்கி ஈடுபட்டிருந்தானென்று தெரியவருகிறது.

ஜிகோஸ்லோவேகியா, ஜுகோஸ்லேவியா, ருமேனியா முதலிய தேசங்களில் ஒரு காலத்தில் ஹங்கேரி தேசத்தினர் சிலருக்குப் பூஸ்திதி இருந்ததுண்டாம். அந்த அரசாங்கங்கள் ஹங்கேரியர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்துகொண்டனவாம். ஸ்டாவெஸ்கி என்ன யோசனை செய்தானென்று தெரியுமா. அந்தந்த நிலச்சுவான்தார்களைத் தேடிப் பிடித்து நிலங்களின் உரிமைகளைக் குறைந்த விலைக்கோ, விலையில்லாமலோ வாங்கிக் கொள்வதென்றும் பிறகு தனது சமர்த்தை உபயோகித்து அத்தனை பூமியையும் கபளீகரம் செய்வதென்றும் ஆலோசித்திருந்தானாம். இந்தப் 'பெரிய' முயற்சிக்குப் பண உதவி செய்வதற்குக்கூட அவனுக்குச் சிலர் ஏற்பட்டிருந்தார்களாம்.

இப்போது பிரான்ஸில் ஸ்டாவெஸ்கி சம்பந்தமான மோசடிகளைப் பற்றியே எங்கும் பேச்சாயிருக்கின்றது. பல பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பல பேர் அந்த நாட்டை விட்டுக் கம்பி நீட்டிவிட்டனர். விசாரணையை நடத்தி வந்த மாஷியர் பிரின்ஸ் என்ற நீதிபதியை யார் கொன்றதென்பதைத் துப்பறிந்து கூறுபவருக்கு 10 லட்சம் பிராங்கு வெகுமதி யென்றும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. எப்படியாவது இந்த மோசடிக் கூட்டத்தைப் பிடித்தே தீருவதெனப் பிரஞ்சு அரசாங்கம் முனைந்திருக்கிறது.

இருந்த காலத்திலும் ஊரைக் கெடுத்தான் ஸ்டாவெஸ்கி. செத்த பின்பும் கெடுக்கின்றான். க்ரூகர் என்ற தீப்பெட்டி மோசடிக்காரனுக்குப் பிறகு ஸ்டாவெஸ்கிதான் உலகப் பிரசித்தி பெற்ற மோசடிக்காரன்.

BOOKS by MAHATMA GANDHI
(in English)

	Rs. A.
Satyagraha in South Africa	... 4 8
Young India Vol. I	... 4 0
Young India Vol. II	... 4 0
A Guide to Health	... 0 12
Neethi Dharma	... 0 8
Indian Home Rule	... 0 8

இந்தியப் பத்திரிகைச் சங்கம்

"ஒரே ஒரு பத்திராதிபர் 72 பார்லிமெண்டு மெம்பர்களுக்குச் சமம்" என்று மார்லீ என்ற பிரபு ஒரு முறை சொன்னதாக ஞாபகம். பத்திரிகைத் தொழில் கண்ணியமானது, பொறுப்பு வாய்ந்தது. இப்பேர்ப்பட்ட தொழிலை நல்ல முறையில் சிறப்புடன் நடத்துவதற்கு எந்த முயற்சி நடந்தாலும் வரவேற்க வேண்டியதுதான். எனவே, "ஹிந்து" நிர்வாக ஆசிரியர் முயற்சியால் பத்திரிகைத் தொழிற்காரர் சங்கம் ஒன்று சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். இந்தப் பத்திராசிரியர் சங்கத்தின் அசல் மெம்பர்களில் தேச பாஷை ஆசிரியர்கள் பலர் இல்லாதது ஒரு குறையாகும். இந்தச் சங்கம் சம்பந்தமாகச் சில யோசனைகளை நாம் கூற விரும்புகிறோம். பத்திரிகைத் தொழிலில், தொழிலின் முறையில் மிக வெற்றிகரமாக நடக்கும் பெரிய பத்திரிகைகளின் பிரதிநிதிகள் மாத்திரம் தான் இதில் இருக்கிறார்கள். மாகாணத்துக்கு மாகாணம் உள்ள பல பத்திரிகைகளையும் தொழில் முறையில் கட்டுப்பாடு கொள்ளச் செய்யும் முயற்சியையும் இச்சங்கம் கைக்கொள்ள வேண்டும். அதற்காகப் பல கிளைச் சங்கங்களை ஏற்படுத்தலாம். இல்லாவிட்டால், லண்டனிலுள்ள ரோதர்மீர் போலவும், அமெரிக்கக் கோடீசுவரர்களைப் போலவும் பத்திரிகை யுலகம் முதலாளி உலகமாகச் செய்யக்கூடிய முயற்சிகளைச் சிலர் கைக்கொண்டுவிடக் கூடும். பத்திரிகைத் தர்மங்களையும் உரிமைகளையும் இச்சங்கம் பாதுகாத்து வருமாம். சர்க்கார் ஆக்கிரமணத்திலிருந்து பெரிய பத்திரிகைகள் தங்களைக் காத்துக் கொள்ளுவதோடு நிற்காமல், சிறிய பத்திரிகைகளை நசுக்காமல் அவற்றோடு சகோதர பாவத்துடன் உழைக்கவும் வேண்டும். இதை இச்சங்கத்தார் நினைவில் வைக்கவேண்டும். செய்தி வசதி, தளவாட சாமான்கள் மலிவு முதலியவை பற்றியும் இச்சங்கம் கவனம் செலுத்தப் போகிறது. இவ்விஷயங்களிலும் எல்லாப் பத்திரிகைகளும் நேசபாவம் கொண்டு ஒன்றுக்கொன்று உதவியாய் நிற்க வேண்டும். புதிய பத்திரிகைச் சங்கத்தாருக்கு இந்த யோசனைகள் எட்டுமா?

யாத்திரா மார்க்கம்

உப்புப் போராட்டம்

மேற்குக் கடற்கரை போரத்தில் மொக வீரர்கள் என்ற செம்படவ ஜாதியினர் இருக்கிறார்கள். அவர்களிடையில் மது விலக்குப் பிரசாரம் செய்து வரும் ஞானோதய சமாஜத்தார், மங்களூரில் மகாத்மாஜீக்கு ஓர் வரவேற்பு அளித்தார்கள். மொகவீர ஜாதியார் தான் மற்றெந்த வகுப்பாரையும் விட மிக அதிகமாக உப்பு வரிச் சுமையால் கஷ்டப்படுகிறார்கள் என்று அதில் சொன்னார்கள். காந்திஜீ இவ்வரவேற்புக்குப் பதில் சொல்லுகையில் கூறியதாவது :—

"நானும் ஓர் செம்படவக் கிராமத்தைச் சேர்ந்தவன்தான். செம்படவர் வழக்கம் எனக்குத் தெரியும். இவர்களைப் பார்த்துத்தான், மீனைப்போல் குடிக்கிறான் என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழி ஏற்பட்டுவிட்டது. மது விலக்கு வேலையில் நீங்கள் ஓரளவு வெற்றிபெற்றிருப்பதற்குச் சந்தோஷிக்கிறேன். குடிக்க வேண்டாம் என்று பிரசாரம் செய்வதோடு மாத்திரம் நின்று விடாதீர்கள். பெரும்பாலும் வேறு வேலையில்லாததால்தான் ஜனங்கள் குடிக்கிறார்கள். மனம், கை, கால்களுக்கு வேலை கொடுக்கும் வேறு பல வழிகளைக் கண்டு பிடியுங்கள். குடியை ஒழிப்பதற்கு மற்றவர் கைக்கொள்ளும் வழிகளையும் கவனித்து நடவுங்கள். நிற்க, செம்படவர்களுக்கு உப்பு மிகவும் அவசியம் என்று நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை. என்றோ ஒரு நாள் உப்புப் பிரச்சினை குறித்துப் போராடி நாம் அதில் வெற்றி அடையப் போகிறோம் என்பதில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. உப்பு விஷயத்தைப் பற்றி நான் சோர்வடையவே யில்லை. உப்பு வரிக் கிளர்ச்சி மிக நியாயமானது. மனப்பூர்வமான உழைப்புடன் கூடிய எந்த நியாயமான கிளர்ச்சியும் இறுதியில் தோல்வியுற்றதென்பதே கிடையாது."

பாவியின் மனசு

கார்வார் என்ற இடத்தில் ஒரு பிரசங்கத்தில் காந்திஜீ சொல்லியதாவது:-

"ஹரிஜன நிதிக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும். ஏனெனில், அது பாவத்துக்குச் செய்துகொள்ளும் ஓர் பிராயச்சித்தமாகும். பிராயச்சித்தம்



செய்துகொள்ளுபவன், கொடுப்பதால் லாபமடைகிறான்; கொடுக்காமல் இறுக்கி வைத்துக் கொள்ளுவதால் நஷ்டமடைகிறான். பாவியின் மனசு, பிராயச்சித்தம் செய்து தீர்க்கும் வரையில் சதா சர்வதாக் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருக்கும்; உலகத்தில் உள்ள சகல ஐசுவரியத்தையும் அடைந்தாலும் அவன் சந்தோஷ மடையான். தீண்டாமை என்பது ஹிந்து மதத்தையே அழித்துவிடக் கூடிய ஓர் பாவமாகும். பலவந்தத்தா லல்ல, ஆத்மத் தூய்மையாலேயே நாம் இதனின்றும் விடுதலையடைய முடியும்."

பலியிடும் கோயில்கள் வேண்டாம்

சிர்சி என்ற விடத்திலுள்ள மாரிகம்பாக் கோயில் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட் டிருக்கிறது. இதில் மிருக பலியும் நடப்பதுண்டாம். இந்த இரண்டு விஷயத்தையும் பற்றிக் காந்திஜீ கேள்விப்பட்டபோது, சொல்லியதாவது :—

"இந்தக் கோயிலைத் திறந்துவிட்டதற்குத் தர்மகர்த்தாக்களைப் பாராட்டுகிறேன். ஆனால் இதில் மிருக பலி நடப்பதைக் கேட்டு வருத்தமுறுகிறேன். மிருக பலி நடக்கும் எந்த இடத்திலும் தெய்வ சாந்நித்தியம் இருக்குமென்று நான் நினைக்க முடியவில்லை. மிருக பலி, மனித அறிவுக்கே அவமானமாகும்; மனித ஹ்ருதயத்திற்குப் பழியாகும். தன்னலத்தியாகம், ஆணவம அறுதல் இவற்றின் மூலமே ஆண்டவனைத் திருப்திசெய்ய முடியும். ஆகையால், மிருக பலியை நிறுத்தும்படி இந்தக் கோயில் தர்மகர்த்தாக்களை வேண்டிக் கொள்ளுகிறேன். மிருக பலியிடப்படும் எந்தக் கோயிலுக்குள்ளும் ஹரிஜனங்களை அழைத்துச் செல்ல வேண்டாம் என்றுகூட நான் சொல்லுவேன்."

பணம் ஒரு "லைசன்ஸ்" அல்ல

தங்களை அடிமைகளைப்போல் இதரர் நடத்துவதாக, சித்தப்பூர் ஹரிஜனங்கள் கூறினார்கள். இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், காந்திஜீ கூறியதாவது :—

"சவர்ண ஹிந்துக்கள் ஹரிஜனங்களின் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். இல்லாவிட்டால், ஹரிஜன நிதிக்கு நீங்கள் பணம் கொடுத்ததால் பயனில்லை. தீண்டாமைப் பாவத்தை ஒழிக்கவே நீங்கள் பணம் கொடுக்கிறீர்கள். அந்தப் பாவத்தைப் பின்னும் இழைத்துக் கொண்டிருப் பதற்கான 'லைசன்ஸ்' என்று இந்த நன்கொடைகளை எவரும் கருதலாகாது. வருங்காலத்தில் இந்தப் பாவங்களைச் செய்வதில்லை என்ற உறுதிக்கு அடையாளமாகவே இந்த நன்கொடைகளை நீங்கள் கருதவேண்டும்."

ஹரிஜன்—ஹரஜன்

வீரசைவர்களான தீண்டாவகுப்பாருக்கு 'ஹரிஜனங்கள்' என்ற பெயர் பிடிக்கவில்லை யென்று சித்தப்பூரில் ஒருவர் கூறினர். காந்திஜீ இதற்குச் சொன்ன பதிலாவது :—

"ஹரிஜனங்கள் என்பதற்கும் ஹரஜனங்கள் என்பதற்கும் நான் எவ்வித வித்யாசமும் பாராட்டவில்லை. பார்க்கப்போனால், 'ஹரி' என்பதும் 'ஹரன்' என்பதும் ஒரே கடவுளின் வேறு வேறு பெயர்களேயாகும். 'ஹரிஜனங்கள்' என்றால் 'விஷ்ணுவின் பிரியத்திற்குப் பாத்திரமானவர்' என்று அர்த்தம் செய்துகொண்டு, லிங்காயத்துக்கள் அந்தப் பெயரை வெறுக்கிறார்கள். ஆனால் 'ஹரிஜனங்கள்' கடவுளின் பிரியத்துக்குப் பாத்திரமானவர். ஏனெனில், மனிதரால் இகழப்பட்டவரிடமும் அலட்சியம் செய்யப்பட்டவரிடமும் கடவுள் கருணை காட்டுகிறார்."

—"ஹரிஜன்."

Chats Behind Bars
BY
C. RAJAGOPALACHARI
Price As. 6 *Postage extra.*
Sangu Book Depot
Triplicane, Madras.

ஹரிஜன நிதி விநியோகத் திட்டம்

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத் தலைவர் டாக்டர் ராஜன் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அவ்வறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு :—

“நமது மாகாணத்தில் மகாத்மா சுற்றுப் பிரயாணம் செய்ததனால் ஹரிஜன இயக்கம் புதிய வீறு பெற்றிருக்கிற தென்பதில் ஐயமில்லை. இந்த வீறு தணிவதற்கு முன் தக்க திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது.

நமது வேலைத் திட்டத்தை விரைவில் வகுக்கவேண்டியிருப்பதை முன்னிட்டே இச்சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறேன்.

ஆலோசனைகள்

நம் மாகாணத்தில் ஹரிஜன சேவா சங்கத்தின் வேலைகளைச் செய்ய 13 ஜில்லாக்களிருக்கின்றன. அவை வருமாறு :—

1. திருநெல்வேலி
2. மதுரை
3. திண்டுக்கல்
4. திருச்சினுப்பள்ளி
5. தஞ்சாவூர்
6. செங்கற்பட்டு
7. வடாற்காடு
8. தென்னாற்காடு
9. ராமநாதபுரம்
10. சேலம்
11. கோயமுத்தூர்
12. காரைக்குடி
13. நீலகிரி

2. இப்போது வேலை, செய்துவரும் ஜில்லாக் கமிட்டிகளாவன .—

1. திருநெல்வேலி.
2. மதுரை.
3. திருச்சினுப்பள்ளி.
4. கோயமுத்தூர்.
5. தஞ்சாவூர்.
6. வடாற்காடு.
7. காரைக்குடி.

மகாத்மாஜீ சுற்றுப் பிரயாணத்தில் முதற்கூறிய 13 ஜில்லாக்களிலிருந்தும் நிதி சேர்த்திருக்கிறோம். கமிட்டியில்லாத ஜில்லாக்கள் இந் நிதியினின்று எத்தகைய நலனையும் எதிர்பார்க்க முடியாது.

எனவே இப்போது கமிட்டியில்லாத ஜில்லாக்கள் உடனே கமிட்டிகளமைத்துத் தக்க வேலைத் திட்டங்களையமைத்துத் அனுப்பவேண்டியது மிக மிக அவசியமாகும்.

3. காந்திஜீ சுற்றுப் பிரயாணத்தில் சென்ற ஊர்களில் நிதிக்காகப் பணந் திரட்டியவர்களையும், உதவி புரிந்தவர்களையும் ஜில்லாக் கமிட்டிகளையழைப்பவர்கள் கலந்து முடிவுசெய்ய வேண்டியது முக்கியமாகும்.

4. நிதிக்குப் பணங்கொடுத்து உதவியவர்களின் பிரதிநிதிகள் அந்தந்த ஜில்லாக் கமிட்டியின் தலைமைக் காரியாலயம் உள்ள ஊரில் கூடி அங்கே ஏற்கனவேயுள்ள ஜில்லாக் கமிட்டியாருடன் கலந்து நிறைவேற்றத் தக்கதோர் வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

5. கமிட்டி இல்லாத ஜில்லாக்களிலும், கமிட்டி பெயரளவில் மட்டுமிருந்து வேலை எதுவும் செய்யாமலிருக்கும் ஜில்லாக்களிலும் நன்கொடையாளர்களுக்கும் அனுதாபிகளுக்கும் தக்க காலத்தில் அறிவித்துக் கமிட்டியையமைப்பதில் தமக்கு உதவிபுரியவேண்டுமெனக் கேட்க வேண்டும். 1934-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-ந் தேதிக்குள் இக் கமிட்டிகள் ஏற்படாவிட்டால், மாகாண போர்டாரே ஒரு கமிட்டியை நியமித்து அதைக்கொண்டு அந்த ஜில்லாவில் வேலையை நடத்துவிப்பார்கள்.

6. ஒரு ஊரிலிருந்து நிதிக்குப் பணம் உதவியிருந்தபோதிலும் அந்த ஊரிலிருந்து தனிப்பட்ட ஒருவர் அனுப்பும் எத்திட்டமும் அங்கீகாரம் பெறாது. எல்லாத் திட்டங்களையும் ஜில்லாவாரியாகக் கருதவேண்டும். ஒவ்வொரு ஊரும் நிதிக்கு எவ்வளவு தொகையை உதவியிருக்கின்றதோ அதற்கேற்றவாறு ஒவ்வொரு ஊரின் திட்டங்களுக்கும் ஜில்லாக் கமிட்டிகள் தொகைகளை ஒதுக்கிவைக்கவேண்டும்.

7. ஜில்லாக் கமிட்டிகள் ஏற்பட்டுங்கூடச் சரியானபடி வேலை செய்யத் தவறினால், மாகாண போர்டார் அந்த வேலை செய்யாத கமிட்டியின் வேலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நேர்முகமாக அவைகளை நிறைவேற்றுவார்கள்.

8. வழங்கப்பட்ட நிதியில் 100 க்கு 75 மட்டுந்தான் ஹரிஜன முன்னேற்றத்திற்கான திட்டத்தின் பொருட்டு மட்டும் செலவிடுவதற்குக் கிடைக்கும். காந்தி ஹரிஜன நிதியினின்று இத்தகைய திட்டங்களுக்கு மட்டுந்தான் செலவு செய்யலாம்.

9. ஹரிஜனங்கள் கைக்குப்போய்ச் சேரும் தொகையும், ஜில்லா மேற்பார்வைச் செலவும் மாகாண மேற்பார்வைச் செலவும் மட்டுந்தான் 100 க்கு 75 விகிதத்தினின்று செலவு செய்ய வேண்டும். எனவே திட்டம் வகுக்கும் போது மேற்பார்வைச் செலவுகளையும் சேர்த்தே திட்டம் வகுக்க வேண்டும்.

10. எல்லாத் திட்டங்களுக்கும் குறைந்தது 2 வருஷங்களுக்காவது நிதி ஒதுக்கி வைக்கவேண்டும். முந்திய மாதத்திய வரவு-செலவுக் கணக்குகளை மாகாண போர்டுக்கு ஜில்லா கமிட்டியார் அனுப்பியவுடன், அம்மாதத்திற் கென ஒதுக்கப் பட்ட தொகையை அனுப்புவார்கள்.

11. மாதந் தோறும் கணக்குகள் அனுப்பாத கமிட்டிகளுக்கு இம்மாதிரி ஒதுக்கு நிதி கிடையாது.

12. கால் வருஷத்திற் கொருமுறை, அதாவது டிசம்பர் 31, மார்ச்சு 31, ஜூன் 30, செப்டம்பர் 30 ஆகிய தேதிகள்முடிய ஏற்படும் வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கைப் பத்திரத்துடன் ஒவ்வொரு ஜில்லாக் கமிட்டியும் அனுப்பவேண்டும்

13. நிர்வாகச் செலவிற்கும், பிரசாரச் செலவிற்கும் இந் நிதியினின்று பணம் செலவு செய்யக்கூடாது.

14 முன்னேற்ற வேலையின் மேற்பார்வைச் செலவாக மட்டுமன்றி. தனிப்படக் காரியாலயத்தின் செலவில் காரியதரிசியின் சம்பளமெனச் செலவு செய்யக்கூடாது. இத்தகைய மேற்பார்வையாளர்கள் ஊழியர்களாகவும், தொண்டில் ஆர்வமுடையவர்களாகவும் சிறு தொகையைக் கொண்டு திருப்தியடையக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். ஜில்லாக்களில் செல்வாக்குள்ளவர்கள் இந்தக் காரியதரிசி வேலையை ஏற்றுக்கொள்ளும்படி தூண்டினால் நலம். குமாஸ்தா வேலையும், கடிதப் போக்கு வரவு வேலைகளும் ஜில்லா மேற்பார்வையினங்களைக் கொண்டே கூடியவரை நடத்திக்கொள்ளுதல் நலம். பிரயாணங்களின்

பொருட்டு என்ன தொகை செலவாகின்றதோ, அந்தத் தொகையை மட்டும் பிரயாணப் படியாகக் கொடுக்கலாம். பொதுக் கூட்டங்கள், சுவர் விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், புஸ்தகப் பிரசுரங்கள் முதலியவற்றின் பொருட்டு இந்நிதியினின்று செலவு செய்யக் கூடாது. அவசியமானால், அவைகளுக்கென நிதி திரட்டி அந்தக் காரியங்களுக்குச் செலவிடலாம்.

15. திட்டங்கள் அனுமதி பெறு முன்னதாக, நிதி சம்பந்தமான வரவு-செலவுக் கணக்குகளை இக்காரியாலயத்திற்கு அனுப்ப வேண்டும். இந்தக் கணக்குகளை அனுப்பினாலொழிய, எத்தகைய பணமும் கொடுக்க முடியாது.

16. முன்னேற்ற வேலைகளாவன:—
ஒரு ஹரிஜனச் சிறுவனோ சிறுமியோ பொதுக் கல்வியாவது தொழிற் கல்வியாவது, ஒரு பயிற்சிச் சாலையில் பயிலுவதாகவிருந்து, ஜில்லாக் கமிட்டியார் சிபார்சு செய்து மாகாண போர்டார் ஏற்றுக் கொள்ளுவதாகவிருந்தால் அம்மாணவர்களுக்கு உதவி நிதி வழங்கலாம்.

சர்க்கார் உதவியாவது, ஸ்தல ஸ்தாபனங்களின் உதவியாவது கிடைக்காத இடங்களில், நல்ல குடி தண்ணீர், சுகாதார வேலைகள், மருத்துவ உதவி ஆகியவற்றைத் தேவையானவர்களுக்கு வழங்குதல்.

மாணவர்களுக்கு உணவு, புத்தகம், எழுதும் சாமான்கள் முதலிய உதவிகள் வழங்காத பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஏழை ஹரிஜனப் பிள்ளைகளுக்கு அவைகளை வழங்குதல்.

மதுவிலக்கு சம்பந்தமான படக் காட்சிப் பிரசுரங்களுக்காகவும், ஹரிஜன சேவா சங்கத்தார் ஒப்புக்கொண்டுள்ள பஜனைக் கோஷ்டிகளுக்காகவும், காந்தி ஹரிஜன நிதியினின்றும் பொருளுதவலாம். ஹரிஜனங்களின் குறைகளைத் தீர்க்கவேண்டித் தொடரப்படும் வழக்குகளின் பொருட்டு இந்நிதியினின்று செலவு செய்யக்கூடாது.

தொழுகைக்காகவும், கல்விக்காகவும் இத்தொகையைக் கொண்டு கட்டடங்கள் கட்டக்கூடாது. ஆனால், கிணறுகள் வெட்டலாம், பள்ளிக்கூடங்களுக்காகச் சிறு குடிசைகள் கட்டலாம்.

நெருப்பு, பூகம்பம் முதலிய இயற்கைச் செயல்களால் சேதப்பட்டவைகளை மீண்டும் கட்டும் பொருட்டு இந்நிதி செலவாகக் கூடாது.

17. நிர்வாகச் செலவின் பொருட்டும் பிரசாரச் செலவின் பொருட்டும் 100 க்கு 20 விகிதம் ஒதுக்கி வைக்கப்படும் என்னும் விதி 1-4-34-ம் தேதி முதல் ரத்தாகிவிடும்.

18. தம் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள திட்ட வேலைகளைச் சரிவர மேற்பார்ப்பதற்கான சாதனங்களை ஜில்லாக் கமிட்டியார் அமைத்துக்கொள்ள வேண்டும். ஜில்லா மேற்பார்வையாளர்கள் தாம் தினசரி செய்யும் வேலைகளைக்குறித்துச் சரியான குறிப்புப் புத்தகமொன்று வைத்திருக்கவேண்டும். இந்தப் புத்தகத்தை ஜில்லா அதிகாரிகள் அவ்வப்போது பரிசீலனை செய்து அவர்கள் வேலை திருப்திகரமாயிருக்கிறதெனக் கூறினாலன்றி, அவர்களுக்கு எத்தகைய பணமும் கொடுக்கக்கூடாது.

19. ஒதுக்கப்பட்டுள்ள தொகையை விட அதிகத் தொகை வேண்டுமானால் ஜில்லா அதிகாரிகளின் சிபார்சுகளின் பேரில் மாகாண போர்டார் ஆலோசிப்பார்கள்.''

கதரையே அணியுங்கள்

யாத்திரை வசதி

க்ஷேத்திர யாத்திரை என்பது நமது நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும். யாத்திரையால் மனிதனது அறிவு விசாலமடைகிறது; தேகத்துக்கும் நன்மை ஏற்படுகின்றது; குணம் பண்படவும் மார்க்கமுண்டு. இதுதான் க்ஷேத்திர யாத்திரையின் ரகசியம். முன் காலத்தைப் போல இப்போது க்ஷேத்திர யாத்திரை செய்வது சாத்தியமல்ல; அவசியமுமில்லை. ரயில் வண்டிகளில் சமீப காலத்தில் சில விசேஷ வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி வசதி செய்யும் கம்பெனிகளுள் சென்னையிலுள்ள ராம் மோகன் கம்பெனியும் ஒன்று. பிரயாணிகளுக்கு இவர்கள் மிகவும் கவனமாகச் சகல விதமான வசதிகளும் செய்திருக்கிறார்கள். பணம் ஒன்றையே குறியாகக் கொள்ளாமல் பொதுஜன சேவையையும் நோக்கமாகக் கொண்டவர்கள்தான் இப்பேர்ப்பட்ட சௌகர்யங்களைச் செய்து தர முடியும். ஏழைகளும் பணக்காரரும் இவர்கள் ஸ்பெஷல் வண்டியில் மிகுந்த சௌகர்யமாகப் பிரயாண செய்து வருகிறார்கள். யாவருக்கும் திருப்திகரமான ஏற்பாடுகளை இவர்கள் செய்து தருவது பாராட்டத்தக்கது.

இக்கம்பெனியார் இதுவரை பத்து யாத்திரை ஸ்பெஷல்கள் விட்டிருக்கிறார்கள். சமீபத்தில்தான் பத்தாவது ஸ்பெஷல் வண்டி புறப்பட்டது. வடநாட்டிலுள்ள (1) துங்கபத்ரை, (2) பண்டராபுரம், (3) பஞ்சவடி, (4) ஸபர்மதி, (5) மாத்ருகயா, (6) புஷ்கரம், (7) பிருந்தாவனம், (8) கோகுலம், (9) கோவர்த்தனம், (10) குருக்ஷேத்திரம், (11) ஹரித்துவார் (12) அயோத்யா, (13) பிரயாகை, (14) ஸ்ரீ காசி, (15) கயா, (16) ஜகந்நாதம் முதலிய இன்னும் பல க்ஷேத்திரங்களுக்கு இவ்வண்டிகள் செல்லுகின்றன.

சமீபத்தில் சென்ற வண்டியில், (1) டாக்டர் காமத்தும் அவர் மனைவியும், (2) ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள், (3) திருவனந்தபுரம் ரிடயர்டு ஜட்ஜி ஆனந்தராவ், (4) மங்களூர் பாவஞ்சி குரு ராவ், (5) திருவனந்தபுரம் வெங்கட ராவ் தம்பதிகள், (6) டாக்டர் சுப்பராய முதலியாரும் அவர் மனைவியும் இவர்களுள்பட அநேகர் யாத்திரை சென்றிருக்கிறார்கள். நிற்க,

இவ்விடத்தில் எம். எஸ். எம். ரயில்வே கம்பெனியாரும் இந்த யாத்திரை ஸ்பெஷல்கள் விஷயத்தில் பிரயாணிகளுக்குத் தங்களாலான சகல வசதிகளையும் கவனித்துச் செய்து தருவதையும் குறிப்பிடாதிருக்க முடியாது. பொதுவாகவே, பொதுஜன சௌகரியத்தை அவர்கள் கவனித்து நடக்கிறார்கள். சமீபத்தில் காந்திஜீ சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது, அவருக்கு அவர்கள் பிரத்யேகமாய்ச் செய்து தந்த சில விசேஷ சௌகர்யங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of 2¼" × 9"

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரு. 4. வெளிநாடு ரு. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ.	1	8	0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

"His Master's Voice"

நம்பிக்கை வாய்ந்தது

பாடகரின் குரலை மிகவும் சுத்தமாக எடுப்பதையே "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியார் எப்போதும் இலட்சியமாய்க் கொண்டிருக்கிறார்கள் ; செலவை அவர்கள் பாராட்டுவதில்லை. விடாமல் ஊக்கத்தோடு இவ்விஷயத்தில் அவர்கள் உழைத்து வந்திருப்பதால்தான், அவர்களுடைய கிராமபோன்கள் இன்று உலகத்தில் முதல் தரமா யிருக்கின்றன ; பாடகர் குரலை உள்ளபடி சுத்தமாய்க் காட்டுகின்றன ; நீடித்த காலமும் உழைக்கின்றன.

நீங்களே நிர்ணயித்து கொள்ளுங்கள்



உங்களுக்குச் சமீபத்திலுள்ள ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் வியாபாரி ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் மெஷின்களை நேரில் வைத்துக் காண்பிப்பார்.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

கிராமபோன் கம்பெனி, லிமிடெட்.

ஸெளத் பரேட், பெங்களூர்.

Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.